பொது ... யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

முரசு 2 10 3-1985 ஞாயிற்றுக்கிழமை (மாசி 27-ஜ. ஆகிர் 17) முழக்கம் 34

## புத்தாண்டைக் கொண்டாட ஏப்ரல் 12, 13ல் ஊரடங்கு ரத்து?

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இரண்டு தினங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை ரத்துச் செய்வது பற்றி இப்போது ஆலோசிக்கப் படடு வருகின்றது. அடுத்த மாதம் 13ம் திகதி புத்தாண்டு தினமாகும் அதற்கு முதல் நாளான 12ம் திகதியும் விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இவ்விரு நாட்களிலுமே ஊரடங்கை ரத்துச் செய்ய ஆலோசிக்கப்படுகின்றது. தற்போது ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இரவு 7 முதல் காலை 4 மணிவரையும், வவுனியாவில் இரவு 10 முதல் காலை 4 மணிவரையும் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

# வவுனியா - ஆனையிறவு இடையுள்ள பகுதியில் இரண்டு லட்சம் சிங்களவர் குடியேற்றப்படுவர்

வவுனியாவுக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு லட்சம் சிங்களவர்களைக் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் நேற்று அறிவித்தார்.

வடபகுதியில் குடியேற்றப்படும் சிங்களவர்களில் கூடுதலானவர்கள் இப்பிரதேசத்திலேயே குடியேற்றப்படுவர் என்றும் அமைச்சர் மீரிகமவில் நடைபெற்றமாபோபல வைபவத்தில் நேற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இங்கு குடியேற்றப்படுபவர்கள் தென் பகுதியிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள் என்றும், இவர்களுக்கு பாதுகாப்புக்கான ஆயுதப்பயிற்சியும், நவீன விவசாயப் பயிற்சியும் வழங்கப் படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். தமிழர்பாரம்பரியபிரதேசமென்று எதுவும் கிடையாது என்றும், சகல இனமக்களும் கூட்டாக வாழ்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்றும் குறிப்பிட்ட அமைச்சர் சிங்களப் பகுதிகளில் தமிழர் பாதுகாப்பாக வாழ்வதை உலக நாடுகளே பாராட்டியிருப்பதாகவும் சொன்னார்.

★ மட்டுநகரில் பிடிபட்டு கொழும்பு கொண்டு செல்லப்பட்ட

# கிருஷ்ணமூர்த்தி ரி. வி. மூலம் உண்மை கூற விரும்புகிறாராம்!

## தமது சகாக்களின் நடவடிக்கைகளை அவர் தெரிவித்துள்ளதாகவும் அரசு அறிக்கை

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை மட்டுநகரில் கைதாகி, தற்போது கொழும்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வரும் 'புளொட்'டின் கிழக்கு மாகாண ராணுவத் தலைவரென்று வர்ணிக்கப்பட்டுள்ள இரத்தினம் கிருஷ்ணமூர்த்தி, தீவிரவாதிகள் தொடர்பான பல முக்கிய தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கியுள்ளதுடன், தங்களைப் பற்றிய உண்மையான நிலையினைத் தொலைக்காட்சியில் தோன்றி எடுத்துக் கூறி, ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறு தமது சகாக்களிடம் கோரிக்கை விட விரும்புவதாகவும் நேற்றிரவு அரசாங்கம் அறிவித்தது.

கிருஷ்ணமூர்த்தியுடன் சேர்ந்து கைதான மற்றைய ஏழு இளைஞர்களும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

முக்கிய தலைவர் என்று கூறப்படும் கிருஷ்ணமூர்த்தி அரசுக்குத் தேவையான முக்கிய தகவல்களை தெரிவித்திருப்பதாகவும், தனது சகாக்களின் பெயர் விபரங்கள், கிழக்கு மாகாணத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது என்ற விபரங்களையும் விரைவில் ரி. வி. யில் தோன்றி அறிவிப்

—8-ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவுக்கு ஒரு பொலிஸ் நிலையம்

ஆனையிறவில் அமைந்துள்ள பொலிஸ் தடை முகாம், விரைவில் நிரந்தர பொலிஸ் நிலையமாக மாற்றப்படவுள்ளது.

தற்போது பொலிஸ் தடை முகாம் அமைந்துள்ள கட்டடத்திலேயே புதிய பொலிஸ் நிலையமும் இயங்கலாமெனத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள சில பொலிஸாருக்கு ஆனையிறவு பொலிஸ் நிலையத்தில் கடமைக்குச் செல்ல ஆயத்தமாக இருக்குமாறு உத்தரவு கிடைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரின் நிர்வாகத்தில் புதிய பொலிஸ் நிலையம் இயங்கலாமெனவும் தெரிகின்றது.

## கச்சாய் சம்பவம்

கச்சாய் பகுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற நேரடிச் சந்திப்பொன்றினை அடுத்து இடம்பெற்ற சிறுமோதலின் போது சிலர் காயமடைய

—8-ஆம் பக்கம் பார்க்க

## நேற்றுமுன்தினம் மட்டும் 560 பேர் சென்றனர்

நேற்றைக்கு முன்தினம் மட்டும் சுமார் 560 இலங்கைத்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## பாலைதீவு சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

(குருநகர்)

குருநகர் பகுதியிலிருந்து பல வள்ளங்களில் பாலைதீவு அந்தோனியார் கோவிலை நோக்கி புறப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் நடுக் கடலில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடல் கண்காணிப்பு வலயச் சட்டம், நாட்டு நிலைமை ஆகியன காரணமாக கச்சதீவு, பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவங்கள் இவ் வருடம் ரத்தானது தெரிந்ததே.

இதனைப் பொருட்படுத்தாத பெருந் தொகையான குருநகர் பகுதி யாத்திரிகர்கள், வள்ளங்களில் சென்று கொண்டிருக்கும்போது, தாழப் பறந்து சென்ற ஹெலிகப்டர் மூலம் இவர்கள் கண்காணிக்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

வள்ளங்களில் இருந்த பெண்

—8-ஆம் பக்கம் பார்க்க

## இருவர் காயம்; ஐவர் கைது!

சென்னையில் இலங்கைத் தமிழ்த்தீவிரவாதிகளின் இரண்டு குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளதாகவும், தமிழ்

—8-ஆம் பக்கம் பார்க்க

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில்

## விசேஷ லீவிலுள்ள 60 ஊழியர்; இப்போதைக்கு அழைப்பு இல்லை!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து கடந்த வருட இறுதியில் விசேஷ லீவில் அனுப்பப்பட்ட அறுபது ஊழியர்களும் உடனடியாக மீண்டும் வேலைக்கு அழைக்கப்படமாட்டார்கள் என்று தெரியவந்துள்ளது.

ஒலிபரப்புக் கூட்டுததாபன தமிழ்ச் சேவை செய்திப் பிரிவு ஆகியவற்றிலிருந்து தயாரிப்பாளர், தொழில் நுட்ப ஊழியர், அறிவிப்பாளர், நிருபர், உதவி ஆசிரியர், தட்டெழுத்தாளர் என்று பல்வேறு தரத்தையும் சேர்ந்த அறுபது ஊழியர்

— 8ஆம் பக்கம் பார்க்க

## 9 பேர் மீது வழக்கு தாக்கல்

(சென்னை)

மீனம்பாக்கம் விமான நிலைய குண்டு வெடிப்புச் சம்பவம் சம்பந்தமாக ஒன்பது பேர் மீது

—8-ஆம் பக்கம் பார்க்க

## அக்கரைப்பற்றில் இரண்டு முதலாளிகளிடம் கைவரிசை

(மட்டுநகர்)

அக்கரைப்பற்றிலுள்ள பிரபல முதலாளி ஒருவரின் வர்த்தக நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் அங்கிருந்த இரண்டு இரும்புப் பெட்டிகளை ட்ராக்டர் ஒன்றில் எடுத்துச் சென்று உள்ளேயிருந்த பணம் முழுவதையும் அபகரித்தன

—8.ஆம் பக்கம் பார்க்க

## டி. ஐ. ஜி. சுந்தர் தற்போது மேற்கு ஜேர்மனியில் வேலை

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம், பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான பத்திரங்களைச் சமர்ப்பித்து

—8-ஆம் பக்கம் பார்க்க

## இன்றைய முக்கிய கூட்டம்

யாழ். திட்டமிடலுக்கும் படை, யுனிசெப் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆகியவைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்பற்றி பொது

—8-ஆம் பக்கம் பார்க்க

national weekly

வார மலர் விலை ரூபா இரண்டு

# தொகுதி அடிப்படையில் ஓய்வூதியகாரர் சங்கங்கள்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் தனித் தனியாக ஓய்வு ஊதியம் பெறுவோர் சங்கம் அமைக்கப்படவுள்ளது. இதனை ஓய்வு ஊதியம் பெறுவோர் தமக்குள் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஒவ்வொரு சங்கத்தில் இருந்தும் பிரதிநிதிகள் தெரியப்பட்டு அவர்கள் கூடி யாழ். மாவட்ட ஓய்வு ஊதியம் பெறுவோர்சம்மேளனம் உருவாகும்.

மேற்படி தீர்மானங்கள் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் ஓய்வு ஊதியம் பெறுவோருடன் நடத்தப்பட்ட மாநாட்டில் எடுக்கப்பட்டன.

இம்மாநாட்டில் அரசாங்க அதிபர் உரையாற்றுகையில், ''இவ்விதம் அமைப்பது மாவட்ட நிர்வாகத்திற்கு உதவியாகஇருக்கும் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தன்னால் கூட்டப்படும் மாநாட்டில் பங்கு பெறலாம் தற்போதுள்ள யூனியனும் இதற்கு உதவவேண்டும்'' என்று கூறினர்.

புலோலி மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் இ. உருத்திரா சார்பில் திரு. கே. விநாசித்தம்பி சமர்ப்பித்த யோசனையின் பேரிலேயே உதவி அரச அதிபர் பிரிவுகளில் சங்கம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தீவுப் பகுதியில்

# சட்டவிரோத மின் பாவனை: அடுத்தடுத்து உயிர்ப் பலிகள்

(வேலணை)

சட்டவிரோத மின் பாவனையால் ஓர் உயிர் அநியாயமாக பலியான சம்பவம் ஒன்று வேலணை மேற்கில் நடைபெற்றுள்ளது.

இம்மரணத்திற்கு இலக்கானவர் மார்க்கண்டன் கிருஷ்ணபிள்ளை (வயது 47) எனபவராவர். காலஞ்சென்றவர் அதிகாலை தோட்டவேலை செய்யச் சென்றதாகவும், வழியில் சட்டவிரோதமாக சிறநற செல்புக் கம்பி மூலம் ஒருவர் மின்சாரம் பெற்றிருந்ததாகவும், அந்த மின் கம்பியில மேற்படி நபர் சிககுண்டு அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்ததாகவும் தெரிகிறது.

சட்டவிரோத மின்பாவனையால் அண்மையில் சரவணையில் ஒரு வாலிபர் பலியானதும் குறிப்பிடத்தக்கது. இச் சட்டவிரோத மின் பாவனையால் நிரந்தர மின்சாரம் பெறுபவர்கள் மின்தடையால் கஷ்டமடைவதாகவும் அநேகர் பலியாவதாகவும் வேலணை மின்சாரசபையினருடன தொடர்பு கொண்டு பிரஸ்தாபித்தபோது அவர்கள், சட்டவிரோத மின பாவனையைத் தடுப்பதற்குத் தங்களிடம் வாகன வசதி இல்லாதிருப்பதாகவும், அப்படியிருந்தும் தாங்கள் சட்டவிரோத மின் பாவனையாளர்களிடம் சென்றால், அவர்கள் தங்களைத் தாக்க வருவதாகவும், இதனால தங்களால இதனைத் தடுகக முடியாதிருப்பதாகவும் கூறினர்.

# 250 கிலோ வாட்ஸ் ட்ரான்ஸ்போமர்

(கல்வியங்காடு)

நல்லூர் உப அலுவலகத்தினால் திருநெல்வேலி கிழக்கு பழம் சந்தையடியில் புதிய தோர் டிரான்ஸ்போமர் பொருத்தப்பட்டிருக்கிறது. 150 கிலோ வாட்ஸ் உடைய டிரான்ஸ்போமர் அகற்றப்பட்டு 250 கிலோ வாட்ஸ் உடைய டிரான்ஸ்போமர் இப்போது பொருத்தப்பட்டிருப்பதால் இப்பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட மின் தடைகளும் மின் திருட்டுக்களும் இனி குறைவதோடு பல நூற்றுக்கணக்கான மின் பாவனையாளர்களும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புதிய கட்டடம் நிர்மாணம்

(மிருசுவில்)

மிருசுவில் புனித நிக்கிலார் இளைஞர் கழகத்திற்கு தற்போது புதிதாக ஒரு கட்டடம் கட்டி முடிக்கபபட்டிருக்கின்றது இதன் ஒரு பகுதியில் பாலர் பாடசாலையும் மறுபகுதியில் நூலகமும் இயங்கும். மிருசுவில பங்கு மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு கழக இளைஞர்களால் சிரமதான முறையில் மேற்படி கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுன்னாகம் பிரஜைகள் குழு

சுன்னாகத்தில் ஆரமபிககப்பட்டுள்ள 'சுன்னாகம் பிரஜைகள் குழு'விற்கு பின்வருவோர் நிர்வாக உறுபபினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: ரீ. மாணிக்கவாசகர், உப-தலைவர்கள்: பீ எஸ். குமாரசாமி, பீ. அரவிந்தன், செயலாளர்: கே ரீ. இராஜசிங்கம், நிர்வாகச் செயலாளா: எஸ் வீ. வடிவேலு. பொருளாளர்: பீ செலவரட்ணம், பத்திராதிபர்: என், எஸ் கிருஷ்ணநாதன், நிர்வாகசபை உறுப்பினர்கள்: எஸ். சர்வேஸ்வரக் குருக்கள், வண பிதா. பிரான்ஸிஸ் மைக்கேல், வண. எஸ். என். சுகுணநாதன், வண. சாம். அல்பிரட்.

# படிவமின்றி மக்கள் பரிதவிப்பு

(மிருசுவில்)

இப்பகுதியிலுள்ள கிராம சேவகர்கள் பலரிடமும் தற்போது நற்சான்றிதழ் படிவங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒருவரின் நன்நடத்தை, அவரின் நிரந்தர இருப்பிடம் போன்றவற்றை உறுதிப்படுத்தும் வகையில மேற்படி படிவங்கள் கிராம சேவகர்களினால் நிரப்பப்பட்டு அவ் அவ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படுவது வழக்கம.

கடவுச்சீட்டு. நேர்முகப் பரீட்சை உட்பட பல முககிய அலுவல்களுக்குப் மேற்படி நற்சான்றிதழ்கள் கோரப்படுகின்றன. இதனால் இவற்றைப் பெறுவோரின தொகையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

தற்போது யாழ். செயலக களஞ்சியத்தில் மேற்படி படிவங்களைக் கொண்ட புத்தகங்களின் கையிருப்பு முடிவடைந்து விட்டதாகவும் கொழும்பிலிருந்து புதிய படிவங்கள் வர வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மிக அவசரமாக நற்சான்றிதழ்கள் தேவைப்படுவோருக்கு மட்டும் கிராம சேவகர்களினால் மேற்படி படிவம் கையினால் எழுதப்பட்டு வழங்கப்படுகின்றது.

# வயர் களவு

(வயாவிளான்)

தொலைபேசி வயர்கள் இப்பகுதியில் களவாடப்படுகின்றன என்றும் சட்டவிரோத மின் பாவனைக்கு இவை பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# கல்வியமைச்சர் நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

முத்தையன்கட்டு இடதுகரைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்த வருடம் தொடக்கம் ஆறும் வகுப்பு நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. ஆறும் வகுப்புக்குப் பாடம் படிப்பிப்பதற்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களும் நியமிக்கபபட்டுள்ளார்கள். இதேவேளை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துச்குக் கணித பாடத்துக்கு ஆசிரியை ஒருவரைக் கல்வி அமைச்சு நியமித்துள்ளது.


## வரி வளம்பரம

### சேவை

சகலவித பொருட்களும் விற்கவும் வாங்கவும் தினமும் வாருங்கள். ஏல விற்பனை நிலையம் கோப்பாய்.

### மாபெரும்ஏலவிற்பனை 16 - 3 - 85

சனிக்கிழமை காலை 9 மணி தொடககம் அலுமாரிகள் - கமருக்கள் - றேடியோக்கள் - டிரான்சிஸ்டர்கள் - மைக்ரோபோனகள இன்னும் அநேகம் மிகுதி நாளை. ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

### வளவு விற்பனைக்கு

சங்கானை தேவாலய வீதுககு அருகிலுள்ள குறிஞ்சியன் திடலில் 28½ பரபபு நிலம் விறபனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. க. சிவநேசன (ஆசிரியர்) வடடு. மேற்கு, சிவன் கோவிலடி வட்டுககோட்டை.

### விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் றோட், முருகமூர்த்தி கோவிலடி, தபால் பெட்டிக்கு அருகாமையில் வீதியோரத்தில் கிணற்றுடன் நான்கு பரப்புக் காணியும், இதற்கு அண்மையில இரண்டு பரபபுக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வீ. இராஜசங்கரி சட்டத்தரணி, தபால நிலைய வீதி, சாவகச்சேரி.

### தவறி விட்டது

70/6 கொழும்புத்துறை வீதி. யாழ்ப்பாணம், பத்மாவதி சின்னராசாவின் அடையாள அட்டை 7-3-85 அன்று சின்னக்கடை சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.





❋ மானிப்பாய் ஆனந்தா வீதி சுந்தரலிங்கம் ஜெயராஜேஸ்வரி தம்பதிகளின் மகள் சுஜிரா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ காங்கேசன்துறை உதயஜோதி தம்பதிகளின் மகன் யோகபிரசாத் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ சங்கத்தானை இராதாகிருஷ்ணன் ஜெயந்தி தம்பதிகளின் மகள் கார்த்திகாஜினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ மாங்குளம் வைகுந்தவாசன் இராசேஸ்வரி தம்பதிகளின் மகள் வசந்தபிரியா இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ கொடிகாமம் பாலச்சந்திரன் வாசுகிதேவி தம்பதிகளின் மகன் நிருபராஷ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ காவலூர் ஜோன் வெஸ்லி செஸ்ரீனா தம்பதிகளின் மகள் சுமங்கலா தாரணி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ நாயன்மார்கட்டு நடராஜா செல்லம்மா தம்பதிகளின் மகள் அனிதா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# இளைஞருக்கு மக்களும் ஒத்துழைப்பு

(வயாவிளான்)

சுரும்பசிட்டி, பண்டத்தரிப்பு, சுழிபுரம், சித்தன்கேணிப் பகுதி வீதிகள் இளைஞர்களால் செப்பனிடப்பட்டு வருகின்றன. இளைஞர்களுக்கு உதவியாக உயர் பதவிகளில் இருப்பவர்களும் இப்பகுதிகளில் இளைஞர்களுடன தாமும் நின்று இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெண்கள் தேநீர், குளிர்பானம் என்பனவற்றை வழங்கி உதவுகின்றனர். ஒவ்வொருவரும் தமது வீட்டிற்கு முன்னால் உள்ள வீதியை நன்கு செப்பனிடும் முயற்சியை எடுப்பதால் வீதி மிக விரைவாகச் செப்பனிடப்படுவதுடன் வசதி கருதி இரு பாதைகளும் சில இடங்களில் அமைக்கப்படுகின்றன

# வைத்திய சேவை நிலையம்

(நல்லூர்)

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்றாலயத்தில் இலவச வைத்திய சேவை நிலையம் ஒன்று சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான வறிய மக்கள் இலவச சிகிச்சை பெறும் இந்த நிலையத்தில் வைத்திய கலாநிதி தயாளன் அம்பலவாணர் தலைமையில் வைத்திய குழுவினர் இலவச சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# மலசல கூட சுத்திகரிப்பு புறக்கணிப்பு

(குருநகர்)

மவுண்கார்மேல் வீதி, தண்ணீர்த்தாங்கி வீதிப் பகுதிகளில் மலசலகூடம் சுத்திகரிக்கும் வேலை ஒழுங்காக நடைபெறுவதில்லை என்பதை இப்பகுதியில் வாழும் பொது மக்கள் மகஜர் ஒன்றின் மூலம் யாழ்-மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரிவித்துள்ளனர்.

வாரத்தில் ஒரு நாளும் பத்து நாட்களுக்குப் பின்புமாக மலசல கூடம் சுத்திகரிக்கும் வேலைகள் இப்பகுதியில் நடைபெற்று வருவதாக மகஜரில் வைத்திய அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

# பதவி உயர்வு

(இருபாலை)

நீர்வேலி வலி-கிழக்கு தென் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையின் தீர்மானங்களுக்கமைய சங்கத்தின் பணியாளர்களை அவர்களின் தகைமை, சேவைமூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


# பதவி வெற்றிடம்

## செய்தி ஆசிரியர் (NEWS EDITOR)

ஈழமுரசு பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளில் போதிய அறிவும், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சியும், மொழி பெயர்க்கும் ஆற்றலும், பத்திரிகை அலுவலகமொன்றின் செய்திப் பிரிவில் ஆகக் குறைந்தது ஐந்து வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவமும் பெற்றவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தொழில் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து எதிர்பார்க்கும் மாதச் சம்பளத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

முற்றிலும் திறமை, தகுதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே நியமனம் வழங்கப்படும். எவர் மூலமாவது தனிப்பட்ட சிபார்சு செய்வித்து இப்பதவியைப் பெற முயற்சி எடுத்தால் சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.


விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''செய்தி ஆசிரியர் பதவி'' எனக்குறிப்பிட்டு, பதிவுத்தபாலில் மட்டும் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சகல விண்ணப்பங்களும் மிகவும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 15-3-1985. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.




# குருவுடன் ஜோடி சேர்ந்து நாதசுரம் வாசித்த கலைஞர்

## த. சண்முகசுந்தரம்

இற்றைக்குக் கிட்டத்தட்ட அரை நூற்றுண்டிற்கு முன்னர் ஒருநாள் மாலை மாவிட்டபுரம் முருகன் கோயிலுக்குக் கிழக்குப்பகுதியில் சிறிய வீடு ஒன்று. அந்த வீட்டிலிருந்து தெய்வ இசைக்கருவியான நாதசுரத்திலிருந்து காம்பூதி இராகம் தேனகப் பாய்கின்றது.

"சோமாசுக்கந்தரே! அருமையான வாசிப்பு ஏது இந்த நேரம் இப்படி ..?" என்று கேட்டுக்கொண்டே படலையைத் திறக்கின்றார் நண்பர் ஒருவர்.

'நான் வாசிக்கவில்லை. குழந்தை அப்பன் சாதகஞ் செய்கின்றான்" என்று அடக்கமாக மறுமொழி சொல்கிறார் மாவிட்டபுரம் முருகன் ஆதீன வித்துவான் தங்கநாதசுரம பெற்ற பெருங் கலைஞர் சோமாசுக்கந்தர்.

"அப்பனே! முருகா! கண் நூறுபடப்படாது. புலியின் குட்டி புலிதான், தகப்பனைப் போலப் பிள்ளை, அப்பன் கண்டிப்பாக முன்னுக்கு வருவான்." என்றார் அந்த இசை அன்பர். அந்த வாழ்த்து உண்மையாயிற்று. இளம் அப்புலிங்கம் வளர்ந்து பெரிய வித்துவானாகி இசை உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்தான். இந்த இசை அன்பரின் வாழ்த்து ஒருபுறம் இருக்கட்டும். பழம் பெரும் நாதசுர வித்துவான்கள், அப்புலிங்கம் பற்றி என்ன கூறினார்கள்? இது கவனிக்கப்பட வேண்டியது.

"இடையிடையே எமது உறவினராகிய நாதசுர வித்துவான் சோமாசுக்கந்தரிடம் போய் எனது வித்தையை வளர்த்து வந்தேன். நான் சாதகம் செய்யும்போது அவர் கேட்டுக் கொண்டிருப்பார். பிழை ஏற்பட்டால் அப்படியே வாயால் பாடிக் காட்டி என்னைத் திருத்துவார். குழந்தை உள்ளம் படைத்த பெரும் வித்துவான் இவர். இவரிடம் பாடம் கேட்டது பற்றி நான் இன்னும் பெருமைப்படுகின்றேன் நாதசுரக் கலையின் சகல அம்சங்களும் ஒருங்கே அமைந்த வித்துவான் இவர் ஆவார்.

**புலிக்குப் பிறந்த குட்டிப் புலி அப்புலிங்கம். அவர் வளர்ந்து வித்துவானாகி, இசை உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்தார். இன்று இசைமரபை வளர்த்த பெரும் படிக் கல்லாக அவர் விளங்குகிறார்.**

இவரின் மகன்தான் பின்னர் புகழுடன் திகழ்ந்த நாதசுர வித்துவான் அப்புலிங்கம்...... அப்புலிங்கம் என்னிடம் இருந்து கற்றவர். சிறந்த வித்துவான். மற்றவர்கள் ஆறு ஆண்டிலே பெறக்கூடிய வித்தையை இவர் ஆறுமாதத்திலே பெறக்கூடியவர் எனது உறவினராகிய நாதசுர வித்துவான் நா. கோ. உருத்திராபதியிடமும் இவர் சிட்சை பெற்றுத் தன் வித்தையை வளர்த்தவர்." இப்படி நாதசுர இன்னிசைப் பேராசான் மாவட்டபுரம் சு. க. இராசா கூறியுள்ளார். இன்றைய தலைமுறையினர் விளங்கக் கூறுவதானால் வித்துவான் இராசாவின் சீடர்கள் இன்று நாதசுர இசையுலகில் புகழுடன் திகழும் மாவிட்டபுரம் ச. சண்முகநாதன், அளவெட்டி செ. சிதம்பரநாதன், அளவெட்டி இ. வேதீஸவரன், இணுவில் இ. சுநதரமூர்த்தி, இணுவில் கோ. காணமூர்த்தி கோ. பஞ்சமூர்த்தி. இவர் சிலர். இனனும் பலர்.

இளம் அப்புலிங்கம் பின்னர் யாழ்ப்பாணம் நாதசுர வித்துவான் சதாசிவத்திடம் பாடங் கேட்டார். தந்தையார் சோமாசுக்கந்தர், வித்துவான் இராசா, வித்துவான் உருத்திராபதி ஆகியோரின் ஆசியுடன் தமிழ்நாடு சென்று தன வித்தையை வளர்த்தார். கீரனூர் சகோதரர்களில் ஒருவராகிய கண்ணப்பிள்ளையை இளம் வித்துவான் அப்புலிங்கம் தன் குருவாகப் பெற்றார், இப்படிப்பாடங் கேட்டவரில் ஒருவர் யாழ்ப்பாணம் முருகையா. முருகையாதான் வித்துவான் சீதாராமனின் மகன். இன்று தமிழ்நாட்டில் பெரும் புகழுடன் திகழும் வலங்கைமான் ஆ. சண்முகசுந்தரத்தின் ஒன்று விட்ட சகோதரர். வலங்கைமான் சண்முகசுந்தரம் மூளாயில் பிறந்து வளர்ந்தவர். தந்தையார் பெரும் வித்துவான் மூளாய் ஆ. வை. ஆறுமுகம்.

யாழ்ப்பாணத்தில் எந்த நாளும நாதசுர தவிற்கலைக்கு ஆதரவு இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாணம் திரும்பிய இளம் வித்துவான் அப்புலிங்கத்தின் புகழ் வளரத்தொடங்கியது. தன் குருவாகிய மாவிட்டபுரம் உருத்திராபதி. மாவிட்டபுரம் இராசா ஆகியோருடன் சோடிநாதஸ்வரமாக இருந்து தன் வித்தையை மேலும்வளர்த்தார். அவர்களுடன் ஆசியுடன் அளவெட்டியில் தனித்துச் சில காலம் தொழில் புரிந்தார். பின்னர் சாவகச்சேரி சு. சண்முகசுந்தரம் நாதசுர வித்துவானுடன் இணைந்து வாசிக்கத் தொடங்கினார். அப்பாடா! இந்தச் சோடி ஈழத்தில் ஈடு இணையற்ற புகழைநாட்டியது. "சோடிப் பொருத்தம் என்றால் இது தான்!" என வித்துவான்களும் இசையன்பரும் பாராட்டினர். இவர்களின் தவில்வித்துவான் முருகப்பா. இந்த முருகப்பா இன்றைய நாதசுர வித்துவான் பஞ்சாபி கேசனின் தந்தை. சண்முகசுந்தரம் மறைந்தார். இது அப்புலிங்கத்தைப் பெரிதும் பாதித்தது. நாதசுரவாத்தியத்தை மறந்து சில காலம் வாழ்ந்தார். எத்தனை நாள் இப்படி வாழ முடியும்? வித்துவான்கள் இரசிகர்களின் வேண்டுகோளின்படி அப்புலிங்கம் தவில்வித்துவான் சின்னப்பழனியுடன் சேர்ந்து இசைமழை பொழிந்தார்.

அப்புலிங்கத்தின் வாசிப்பு எப்போதும் உன்னதமாக இருக்கும். உயர்ந்த தரத்திலிருந்து ஒருபோதும் இறங்காது. இராக ஆலாபரணம், பல்லவி சுரம் என்பவற்றை மரபு மாறாமல் இவர் வாசிப்பார். கர்நாடா இராகங்களை மிகவும் விரிவாகத்தன் குருநாதர்களைப் போல வாசிபார். குறிப்பாகத் தமிழ்க்கீர்த்தனங்கள், தேவாரம் திருப்புகழ் ஆகிய

—6ம் பக்கம் பார்க்க

# 85 உலக நாடுகள் எங்களுக்கு உதவும்

எங்கள் நாட்டை எங்களால் மீட்க முடியுமா என்று சிலர் கேட்கிறார்கள். அகிம்சை முறையாலே எப்பொழுதாவது ஒரு நாட்டை மீட்க முடியுமா என்று சிலர் கேட்கிறார்கள். மீட்கலாமென்று ஒரு சிலர் கருதுகிறார்கள்.

உலக சரித்திரத்தை எடுத்துப் பார்க்கும் போது நீண்ட காலமாக மக்களுடைய உரிமை மறுக்கப்படுகின்ற நேரத்திலே, மக்கள் அடக்கப்படுகின்ற நேரத்திலே என்ன நடந்தது என்பதை எடுத்துக்கூற வேண்டிய தேவை இல்லை. நீதி, நியாயம், மனச்சாட்சி இல்லாமற் போனால் கடைசி நேரத்தில் ஆயுதம் தாங்கிப் போராடுகிற நிலையைவிட வேறு எந்த நிலையும் இல்லை என்ற நிலை எங்களுக்கு, தமிழ் இனத்திற்கு வரக்கூடும்.

அப்படியான நிலை எங்களுக்கு வரும் பட்சத்தில் நான் பெருமைப்படுவேன். அப்போது உலகத்தின் எண்பத்தைந்து நாடுகள் எங்கள் பக்கத்தில் நிற்கும். எந்த நாடுகளென்று கேட்கிறீர்களா?

ஐக்கிய நாடுகள் சபையின் 31 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் எங்களது பிரதமரே தெளிவாகக் கூறியிருக்கிறார்; "யார் யாருக்கு உரிமை மறுக்கப்படுகிறதோ அந்த நாட்டு மக்கள் கடைசிக் கட்டத்தில்,

7ம் பக்கம் பார்க்க

# இலங்கை இந்திய இணைப்புப் பாலம் சர்ச்சைக்குரிய கச்சதீவு

சர்ச்சைக்குரிய கச்சதீவு புனித அந்தோனியார் திருநாள் இன்றாகும். ஆனால் தற்போதைய நாட்டு நிலைமை பால் இம்முறையும் திருவிழா நடைபெறவில்லை. கச்சதீவு நெடுந்தீவுக்கும் – இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கும் சிறு தீவாகும்.

போர்த்துக்கீசர் காலத்திலேயே நெடுந்தீவு மக்களால் இது ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. 1886ல் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை தனித்துவமாக இயங்கத் தொடங்கிய காலத்தில் இங்கு ஆராதனைகள் நடைபெற்றனவாம். அன்றைய யாழ் மேற்றிராணியார் அதி வந் பொன்ஜீன் ஆண்டகை முதல் இன்று வரை யாழ் மேற்றிராசன நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது. நெடுந்தீவு பங்குத்தந்தையே இதற்கும் பரிபாலகர்.

இலங்கையும் இந்தியாவும் இத்தீவு தமக்கே எனப் பிரச்சினை எழுப்பியபோது யாழ் மேற்றிராணியாருக்குக் கீழ் இக் கோயில் இருப்பதைக் கொண்டே அது இலங்கைக்கு கிடைக்க வழி காணப்பட்டது.

கச்சதீவு புனித அந்தோனியர் ஆலயத்தை நெடுந்தீவு மூப்பர் அந்தோனிப்பிள்ளையே நிர்வகிக்கிறார். நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் இன்றும் அதன் கொடிமரமும் கூடும் இருக்கின்றன. திருநாள் ஆரம்பமாகும் முதல் நாள் இவை இங்கிருந்து சமய முறைப்படி ஆலய மணிகள் ஒலிக்க விசேஷ படகில் கச்சதீவுக்குக் கொண்டு செல்லப் படும்.

இத்திருநாளுக்கு சகல சமயத் தலைவர்களும் செல்வார்கள் இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானயாத்திரீகர்கள் இங்கு செல்வது வழக்கம். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர், இந்தியாவிலுள்ள தமது உறவினர்களை இத்திருநாட்காலத்தில் சந்திப்பார்கள். திருநாள் காலத்தில் யாழ் மேற்றிராசன குருமாரும், தமிழக குருமாரும் இங்கு சென்று வழிபாடுகள் பூசை நடாத்துவார்கள். இந்திய பொலிசாரும், இலங்கைப் பொலிசாரும் செல்வார்கள். தற்காலிக பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்பனவும் திருநாளின் போது இடம் பெறும். யாழ். அரசாங்க அதிபரின் கீழ் இதன் நிர்வாகம் செயற்படும்.



## இன்று 10ம் திகதி அந்தோனியார் உற்சவ தினம்

இறுதியாக இங்கு ஒரு முகப்பு 1980ல் அன்றைய பங்குக்குரவர் வண. பிதா பீற்றர் துரைரத்தினம் அடிகளாரால் கட்டப்பட்டு, திருநாளும் நடத்தப்பட்டது. 1981ல் கொலரா நோய் காரணமாக திருநாள் நிறுத்தப்பட்டது அதன் பின்னர் நாட்டின் நிலைமைகளினால் வருடாந்த உற்சவம் இன்றுவரை நடைபெறவில்லை. இந்திய இலங்கை மீனவர்கள் இங்கு மீன்பிடிக்கும் காலங்களில், தங்கி இளைப்பாறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ம. றூபன்

## மதியும் பிறையும்

# நவீன கவிதைத்துறையில் முத்திரை பதித்த நீலாவணன்

முல்லை மணி

“நுண்ணுணர்வுபடைத்த ஒரு கவிதா உள்ளம், சமுதாயத்தில் புரையோடியிருக்கும் கீழ்மைகளைக் கண்டு தாங்காது வெகுண்டெழுந்த ஓர் உள்ளம் தனது தனித்துவமான பார்வையையும் ஆற்றல்களையும் பூரணப்படுத்துவதன் முன்னர் எம்மை விட்டுச் ‘சாவியலை எண்ணிச் சிரி’ என்று பாடியவாறு பிரிந்து விட்டது.” கிழக்கிலங்கையின் தலைமைக் கவிஞன் நீலாவணனின் ‘வழி’ என்னும் கவிதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகின்றார் ஏ ஜே கனகரட்ண. நீலாவணனின் பலநூறு கவிதைகளில வகைமாதிரியான சிலவற்றையேனும் படித்துப் பார்ப்போருக்கு இவ்வுண்மை புலனாகும்.

நீலாவணன் கிழக்கு மாகாணத்திலுள்ள பெரிய நீவாவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் இயற்பெயர் கே. சின்னத்துரை. உறவினரும் ஊரவரும் இவரை நடராசா என்றே அழைப்பர். நீலாவணன், நீலா சின்னத்துரை, அம்மாச்சி ஆறுமுகம், கொழுவு துறட்டி, எழில்காந்தன் என்னும் பல புனைபெயர்களில் மறைந்து நின்று தமது ஆக்கங்களை வெளியிட்டார் எனினும் ‘நீலாவணன்’ என்ற புனைபெயரே அவருக்கு நீடித்த புகழை அளித்துள்ளது.

31-6-’931இல் பிறந்த நீலாவணனின் தந்தையார் பழந்தமிழ் இலக்கிய ஆர்வலரான கேசவபிள்ளை வைத்தியர் தாயார் பெயர் தங்கம்மா. பயிற்றப்பட்ட தமிழாசிரியராகப் பணி புரிந்த இவர் தமிழாசிரியை அழகேஸ்வரியை அன்பு மனைவியாகக் கொண்டவர். வேந்தன், விஜேதன், எழிலரசி, ஊர்மிளா, கௌரி ஆகிய ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையாகிய கவிஞர் 1952 இல் ‘பிராயச்சித்தம்’ என்னும் சிறுகதை மூலம் இலக்கிய உலகப் பிரவேசம் செய்தார், ‘பட்டமரம்’, ‘தப்பிவிட்டான்’ ‘பசியடங்கியது’ ஆகிய சிறுகதைகளை எழுதினாராயினும் தனது ஆளுமையைக் கவிதைத்துறையிலேயே வெளிப்படுத்தியதன் மூலம் தலைசிறந்த கவிஞராகவே இலக்கிய உலகம் அங்கீகரித்துள்ளது. கிழக்கிலங்கைக் கவிஞர்கள் பலர் இவரைத் தங்கள் குருவாகவே மதிக்கின்றனர். இலங்கையில் எந்தவொரு தமிழ்க் கலைஞனுக்கும் இல்லாத அளவு சீடர்கள் இவருக்கு உண்டு. நீலாவணன் கவிதா மண்டலத்தைச்சேர்ந்த பல கவிஞர்கள் இன்று முன்னணியில் வந்து கொண்டிருக்கின்றனர்.

எல்லாவிதமான பாவடிவங்களையும் மிக லாவகமாகக் கையாளும் திறமை வாய்ந்தவர் இவர். சங்ககாலத் தமிழ்க் கவிதை நடையைக் கையாள வல்லவராகத் திகழ்ந்த இவர் அதே சமயம் இன்றைய பேச்சு மொழியையும் சரளமாகப் பயன்படுத்தும் திறமை படைத்தவராகவும் விளங்குகிறார். இவரது கவிதைகள் சில புறநானூற்று நடையை நினைவுறுத்தும்; வேறுசில இராமாயணத்தையும் கலிங்கத்துப்பரணியையும் நினைக்கத் தோன்றும். சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரியின்சாயல் இன்னும் சிலவற்றில் படிந்திருக்கும்; தேவாரங்களின் சந்த விகற்பங்களிலும் பாரதி பாடல்களின் பாணியிலும் கவிதைகள் பல புனைந்துள்ளார்.

நீலாவணன் வாழ்ந்த காலத்தில் (31- 6- 31– 11- 1- 75) இவரது கவிதைகள் நூலுருப் பெறவில்லை. இவர் அமரரான பின்பே ‘வழி’ என்னும் கவிதைத் தொகுதி 1976இல் வெளிவந்தது. இவரது ‘வேளாண்மை’ என்னும் காவியத்தை கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளர் வ.அ இராசரத்தினம் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

1953 தொடக்கம் 1975 வரை நீலாவணனின் கவிதைகளை நோக்குமிடத்து அவற்றின் கவிதைப் போக்கில் மாற்றம் அடைந்துள்ளமையைக் காணலாம். 1953 தொடக்கம் 1960 காலப்பகுதியில் நீலாவணன் கவிதைகள் பெரும்பாலும் காதல் சம்பந்தமானதாகவும் தமிழ் மக்களின் இன மொழி விடுதலை பற்றியனவாகவும் அமைந்துள்ளன. இக்காலப் பகுதியில் சிந்து, விருத்தம் முதலான பாவினங்களின் ஓசை நயத்துக்கு முக்கிய இடம் கொடுப்பனவாக அமைந்துள்ளன. 1960– 75 காலப் பகுதியில் நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் பிரச்சினைகளையும்யதார்த்தநிலையில் அணுகும் சமூக நோக்குடைய கவிதைகளை அதிகம் எழுதியுள்ளார். 60இற்குப் பின்னர் இவர் கவிதைகளில்பேச்சோசைப் பண்பு மிகுந்திருப்பதைக் காணலாம்.

“கவிஞன் என்றால் நிலா, மின்னல், மழை, வசந்தம் சூரியோதயம் போன்றவற்றைப் பாடவேண்டும் என்ற மரபுண்டு. இது தமிழுக்குப் பிரத்தியேகமானதன்று. ஏறக்குறைய எல்லா நாடுகளின் பண்டைய இலக்கியங்களிலும் இப்பண்பினை நாம் காணலாம். இயற்கைக்கும் மனிதனுக்குமிடையே மேற்கத்திய நாடுகளிலே ஏற்பட்டுள்ள பெரும் இடைவெளியின் காரணமாக இப்பண்பு மேல்நாட்டுக் கவிதையில் பெரிதும் அருகிவிட்டது. ஆனால் எமது பண்பாட்டிலே மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே இன்னும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது ஆதலால் எமது கவிஞர்கள் இன்றும் இயற்கையைப் பாடுவது சம்பிரதாய மாகிவிட்டது. பிறவிக் கவிஞரான நீலவாணன் இயற்கை வளம் கொழிக்கும் கிழக்கு மாகாணத்தில் பிறந்ததினால் இயற்கையின் அழகில் லயித்து அதனைப் பாடியதில் வியப்பில்லை. மற்றக் கவிஞர்களின் கைகளிலே பட்டு நைந்து போன பொருட்களுக்கு அவர் புது மெருகூட்டி புத்துணர்வோடு அவற்றைப் பாடினார்’’ என இவரது ‘வழி’ நூலின் முன்னுரையில் குறிப்பிடப் பட்டிருப்பது பொருத்தமானதே.

பந்தல்தோறும் குயில் வித்து
வான்களின்
பணத் தும்புசங்கித விருந்துகள்
குந்திக் காக்கை குரவையிடும்,
மரங்
கொத்தி தாளங்கள் கொட்டிக்
குதிக்கிறார்
வந்து சேர்ந்தனர் நாட்டியத்
தோகையர்
வயல் அரங்குதோறும்புது
நாட்டியம்
இந்த வையம் அனைத்தும்
இருந்துன
தினிய நண்பர்கள் யாவரும்
வந்தனர்

‘வசந்தம்’ என்னும் கவிதையில் இடம்பெறும் இப்பாடல் நீலாவணனின் இயற்கைச் சித்திரிப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

‘பாவம் வாத்தியார்’ என்னும் கவிதை கையாண்டிச் சுவை மிகுந்ததாய் உண்மையாக உழைக்கும் ஆசிரியர் ஒருவரின் நடைமுறைப் பிரச்சினையை மையமாகக் கொண்டது. கிராமத்து ஆசிரியர் அலூவர் பெரிய மனிதர்களின் சின்னத்தனங்களுக்கிசைய அவர்களுக்கு தாளம் போட்டு நல்லபெயர் வாங்கத் தெரியாது ஊரை வளர்ச்சியடையச் செய்தும் ஊழல்களை எடுத்து நிதி கேட்டும், மாணவர்களைப் பகலிரவாகப் படிப்பித்து நல்வழிப் படுத்தியும் வாழ்ந்த குற்றத்திற்காக ஊர்பெரியவர்கள் பெட்டிசம் போட்டு அவரை மாற்றுகின்றனர். ஆசிரியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மிகவும் வேடிக்கையாக குறிப்பிடுகின்றார் நீலாவணன்:

அன்றிரவே பிட்டிசத்தை
அச்சடித்தார்! –உம் மீதில்
ஒன்றிரண்டா குற்றங்கள்!
–ஊரைக் கெடுக்கின்றீர்
சாரயம் போடுவதே சத்தமிடக்
காரணமாம்
ஆரோ ஒருத்தி தொடுப்பு!
அவள்பேர் பூரணமாம்!
ஆரையும்கண்டால் அரசியலே
பேசுகிறீர்
காரணம் நீர்... ஆள் பெரிய
‘கம்யூனிஸ்ட்’ காரனும்
மாணவருக்கும் அந்த மனப்
பான்மை ஏற்படுத்தி
மானங் கெடுக்கின்றீர் மய
பெரிய போடிகளை.

—7ம் பக்கம் பார்க்க

# கேலிச் சித்திரம் துணிவின் சின்னம்

கரவை வரதன்

இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின் போதுதான் ‘கேலிச் சித்திரங்கள், (Cartoons) என்ற பதம் ஓவியர்கள் மத்தியில் உருவானதும் உபயோகமானதுமாகும். சித்திரக்கலைஞர்களால் இன்றும்அது உபயோகிக்கப்படுகிறது.

ஆனால் இன்றைய யுகத்தில் அரசியல் விடயங்களை, நாட்டு நடப்புகளை, கலைஞர்கள் விளையாட்டு வீரர்களின் திறமைகளை தவறுகளைக் கருவூலமாகக், கொண்டு அவை ஆக்கப்படுகின்றன.

ஒரு காலகட்டத்தில், செய்திதாள்களும் சஞ்சிகைகளும், செய்திகளையும் ஆசிரியத் தலையங்களையும் சாரம்சமாகக் கொண்டு அவற்றை எளிமையாய் விளங்க வைக்கும் நோக்கத்துடன், நகைச்சுவையை வழங்குவதற்கு வரையப்பட்ட சித்திரங்களை இந்தக் கேலிச் சித்திரங்களாகக் கணிக்கப்பட்டன.

செய்திப் பத்திரிகைகளுக்கு முற்பட்ட காலத்தில், புகழ் வாய்ந்த கேலிச்சித்திரக் காரர்களான ஹோ ஹார்த்(Hogarth) கோயா (Goya), டௌமியர் (Daumier) ரோலான்ட்சன்(Rowlandson)போன்ற கலைஞர்கள் குறிப்பிட்ட ஒரு விடயம் சம்பந்தமான சித்திரங்களை வரைந்துள்ளார்கள் இவ்வித சித்திரங்கள் தனி ஒரு பாத்திரத்தின் துணிகரச் செயல்களைச் சித்திரித்துக் காட்டுவனவாக அமைந்தன.

19ம் நூற்றுண்டிலும் 20ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் பல சஞ்சிகைகள் கேலிச்சித்திரப் பணியில் சிறப்பாக ஈடுபட்டன. பாரிஸ் நகரத்திலிருந்து வெளியான Charivarin, இலண்டனில் Punch, அமெரிக்காவில் லைவ் (Life), ஜட்ஜ் (Jndge) என்பன இவற்றில சிறப்புத்துவம் பெற்றன.

ஐக்கிய அமெரிக்காவில் வெளிவந்த பல செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தங்களது கிரமமான அம்சங்களிலொன்றாக கேலிச்சித்திரங்களை உள்ளடக்கி வெளியிட்ட போது, அங்கு ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த பல நகைச்சுவைச் சஞ்சிகைகள் தங்கள் கவர்ச்சியை, அபிமானத்தை இழந்து காலப் போக்கில் வெளிவர முடியாது நிறுத்த வேண்டிய நிலைக்குள்ளாகின.

முதல்நகைச் சுவைச் சித்திரம் 20-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஆரம்பமானது. பாஸ்டர் பிறவுண் (Baster Brown) என்ற கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்த ரிச்சாட் அவுட்ஹோட் (RichardOutcault) என்பவர் தமது நகைச்சுவைச் சித்திரங்களை 1902 ல் வெளியிட்டார். நாடு முழுவதிலுமுள்ள குழந்தைகள் ‘பாஸ்

—7ம் பக்கம் பார்க்க

# மண்ணும் எம்மொழியும் இளம் விதவையாகிவிட்டால்

-இளவாலை அமுது-

வாடி மகளே! வடநாடு போய்விடுவோம்
போடி கிழவி என்றென் புத்தியை நீ தட்டாதே!

வீட்டை உடைத்து விட்டார் வேலி எரித்துவிட்டார்
கூட்டைக் குலைத்தபின்பு குடியிருப்ப தெங்கேயடி?

தாலியொடு தங்க நகை சல்லிமுட்டி சீலதுணி
காலமெல்லாம் காத்துவந்த கடுக்கனையும் நாம்
இழந்தோம்

பென்சன் எடுத்துவந்து பிள்ளைக்குப் பால்வேண்டக்
கொஞ்ச இடம்போன கொப்பர் எங்கே சொல்லடி?
வேலை முடிந்துவந்து விறகு கொத்தித் தாறன் என்று
காலையிலே சென்ற கணக்கர் அம்மான் எங்கேயடி?

சாரதியாய் வேலைசெய்த சற்குணனார் நீ படித்த
பாரதத்தில் வந்த தருமர் வெடிபட்டார்
பொங்கலுக்கு முன்னே புத்தகங்கள் வாங்க வென்று
தங்கையுடன் சென்ற சத்தியனின் சேதி என்ன?

பள்ளிப் படிப்பிழந்து கொள்ளைக்கு நாம் பயந்து
பிள்ளைகட்கு வாய்க்கரிசி இடவா? புறப்படு நீ
கண்ணீரின் ஓலமடி! காணுமிடம் கூக்குரலாய்
மண்ணில் இரத்தமடி! மகளே சிறைக்கூடு

வளஞ் சேர்ந்த மண்ணும் மயக்கும் தமிழ் மொழியும்
இளம் விதவை யாகிவிட்டால் என்ன பயன் உனக்கு?

# நினைத்ததும் நடந்ததும்

## இவ்வாரக் கதையமுதம்



"என்ன இன்னும் அவரைக் காணவில்லையே; என்னை ஐந்து மணிக்கு வரச்சொல்லிப் போட்டுத் தான் ஐந்தேகால் ஆகியும் வரவில்லையே.'' தன் கடிகாரத்தைப் பார்த்தபடியே தன்னைத்தானே கேட்டுக் கொண்டே கடற்கரை மணலைக் கையினால் வாரி சிறுகுழந்தைகள்போல் விளையாடிக் கொண்டிருந்தாள் சுதா.

சுதாவும் அமலனும் பல்கலைக் கழக மாணவர்கள். இருவரும் இன்னும் ஒரு வருடத்தில் டாக்டர் அமலன் எனவும், டாக்டர் சுதா எனவும் பட்டம் பெறப் போகின்றனர். அமலனும் சுதாவும் மூன்று வருடங்களாக ஒருவரையொருவர் மனமாரக் காதலிக்கின்றனர். காதல் என்றால் ஊரார் கேலி செய்யும்படியாக இருக்கவில்லை. 'காதல்' என்ற சொல்லுக்குப் பொருள் விளங்கக் கூடியதாகக் காதலித்தனர்.

அலைகளின் ஓசையிடையே அமலனின் மோட்டார் சைக்கிளின் ஓசை அவள் காதில் இன்பத் தேன் பாய்ந்ததுபோல் இருந்தது. நேரத்தைப் பார்த்தாள். மணி ஐந்து - இருபது ஆகியது.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு திரும்பி அமலனைப் பார்க்காது மணலை வாரி வாரி விளையாடிக் கொண்டு பொய்க் கோபமாக நடித்தாள்.

அமலன் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு அவளருகில் வந்தான். அவள் திரும்பாமலே இருந்தது கண்டு 'என்ன சுதா என் மேல் கோபமா? நான் புறப்படும் நேரம் பார்த்து என் தங்கை ஆனந்தியின் பிறந்த தினத்திற்கு எடுத்த போட்டோக்களைப் போட்டோகிராபர் கொண்டு வந்து தந்தார். அவற்றைப் பார்த்து விட்டு எல்லோரும் பார்த்து முடியும் வரை காத்து நின்று நீர் பார்ப்பதற்காகக் கொண்டு வந்துள்ளேன். என்ன நான் சொல்லிக் கொண்டே போகின்றேன். நீர் ஒன்றும் சொல்லாமல் குழந்தை மாதிரி இப்பத்தான் மணலில் வீடு கட்டி விளையாடுகின்றீர். அப்பிடியெண்டால் நான் போகின்றேன்.'' இவ்வாறு கூறியவாறு அங்கிருந்து போக முயன்றான்.

''நான் சும்மா கோபம் போல இருந்தனான். எங்கே படங்களைக் காட்டுங்கோ பாப்பம்'' அவள் கேட்டாள். தனது பாக்கட்டிலிருந்து படங்களை எடுத்துச் சுதாவிடம் கொடுத்துவிட்டு, ''இதுதான் என் அப்பா, என் அம்மா, இதைத் தெரியலையே? இது நான்தான், இதுதான் தங்கச்சி ஆனந்தி'' என்று ஒவ்வொருவராக அறிமுகம் செய்துவைத்தான்.

அமலன் தன் 'அப்பா' எனச் சுட்டிக்காட்டியவரைப் பார்த்ததும் சுதா ஒருகணம் திகைத்து விட்டாள். ஏனோ? யாரிவர்? எல்லாவற்றையும் பார்த்து முடித்ததும் சுதா அவற்றைத் திருப்பித் தர மனமில்லாமல் இருப்பதுகண்டு ''சுதா, என்ன யோசனை? திருப்பித்தர மனமில்லையே'' சிரித்தபடி கேட்டான் அமலன். ''இல்லை... என்ர அம்மாட்டை..... இந்தப்படங்களைக் காட்டிப்போட்டுக் கொண்டரட்டே'' என இழுத்தாள் சுதா.

சற்று நேரம் யோசித்த அமலன் ''சரி உம்முடைய விருப்பம். ஆனால் படங்கள் கவனம். அதுசரி உம்மை என்னத்திற்கு நான் வரச் சொன்னனான். உம்மோட கதைக்கவெல்லே'' எனக் கூறியவாறு அவளது கன்னத்தில் தன் கைகளால் கிள்ளிவிட்டான். அவளது கன்னம் சிவந்தது. அவள் நாணத்தால் தலைகுனிந்தாள். சிறிது நேரம் அளவளாவிவிட்டு இருவரும் விடைபெற்றுத் தத்தம் வீடு நோக்கிப் பறந்தனர்.

வீடு சேர்ந்த சுதா தன்தாயிடம் படங்களைக் கொடுத்து பார்க்குமாறு கேட்டாள். தாய் படங்களை வெளியே எடுத்து முதற்படத்திலிருந்த அமலன் குடும்பத்தைப் பார்த்தாள். திகைப்பு மேலிட, அதைக் கையிலே வைத்திருந்தபடியே கண்ணீர் சிந்தினாள். படத்தில் கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாக விழுந்து அருவியோடுவதுபோல் ஓடின.

அறையினுள் உடைமாற்றச் சென்ற சுதா அதையே யோசித்தபடியே பழைய லாச்சியைக் கொட்டி எதையோ தேடிக் கொண்டிருந்தாள். அதிகநேரச் செலவின் பின் தேடிய அந்தப்பொருள் அவள் கையில்கிடைத்தது.

அதை உற்றுப்பார்த்த அவள் திகைப்பால் தடுமாறினாள். தன்னைச் சுதாகரித்துக்கொண்டே ''அம்மா... அம்மா...'' எனக் கூவியவாறே அம்மாவிடம் ஓடி வந்தாள்; தன் தாயாரின் முகத்தில் கண்ணீர் சொரிவதும் அவள் அதை முந்தானைத் தலைப்பால் துடைப்பதையும் கண்டாள். தான் வைத்திருந்த பொருளை மறைத்தபடியே ''என்ன அம்மா, ஏன் அழுகிறியள்'' சுதா வினவினாள்.

''ஒன்றுமில்லைப் பிள்ளை, ஏதோ தூசோ, கிசோ விழுந்துட்டுது'' இது அம்மாவின் கூற்று.

''இல்லையம்மா ஏதோ காரணம் இருக்குது. மூடி மறைக்கிறியள், இவையளை உங்களுககு முன்னமே தெரியுமே?'' இவர் என் நண்பன் அமலனின் அப்பா. இவ அவரிண்ட அம்மா, இவர் தான் அமலன். இவ அவர் தங்கை ஆனந்தி.'' இவ்வாறு கூறிக்கொண்டே அமலனைச் சுட்டிக்காட்டி 'நான் இவரைக் காதலிக்கின்றேன். இவரும் என்னை மனமாரக் காதலிக்கின்றார்'' என்று சொல்லிவிட்டு தாயைப் பார்த்தாள்.

இதைக் கேட்ட தாய் துணுக்குற்று சிலைபோல் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "அப்போது கேட்டாயே ஏன் அழுகின்றீர்கள் என்று; இப்போ சொல்கின்றேன் கேள். குடும்ப ரகசியம். யாரிடமும் வெளியிடாதே:''

இருபத்து மூன்று வருடங்களுக்கு முன் நான் அவரைக் காதலித்தேன். அவரும் என்னைக் காதலித்தார். சிறிது காலத்தில் எனது வீட்டாருக்கு இவ்விடயம் தெரிய வந்தது. அவர்களின் எதிர்ப்புகளுக்கும், மறுப்புகளுக்குமிடையில் நானும் அவரும் கைப்பிடித்தோம். இருவரும் இந்த வீட்டில் சந்தோஷமாக ஒரு வருடம் வாழ்ந்தோம். அப்போதுதான் எனது வயிற்றில் நீ உதித்தாய்.

இதைக் கேள்விப்பட்டதும் அவரின் முகம் மாறிய விதம் இப்போதும் எனது மனதில் படமாகின்றது. அடுத்த நாள் காலையில் வெளியே வந்தபோது கதவு திறந்தபடி இருந்தது. நான் விசாரித்ததில் அவர் எங்கு இருக்கின்றார் எனத் தெரியவந்தது. அத்துடன் தலையில் இடிவிழுந்தது போல் ஒரு செய்தி. அது தான் உன் அப்பா முதலிலேயே மணமானவர் என்றும், ஆறுமாதக் குழந்தை ஒன்று இருப்பதாகவும் அறிந்து மனம் மிக வருந்தினேன். அவர் திரும்பி வருவார் என்று பார்த்தேன். ஏமாற்றம் தான். நான் தனியே இந்த வீட்டில் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லியும், சட்டைகள் தைத்தும், உன்னைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கினேன். நீ அன்று ஒரு நாள் ஒரு படத்தைக்காட்டி அது யார் என்று கேட்டாயல்லவா? அது தான் உன் அப்பா. இவ்வளவு காலமும் நீ உன் அப்பா எங்கே என்று கேட்டாய் அல்லவா? அதற்கு இதுதான் பதில். இதில் இருப்பவர் அதாவது அமலனின் தந்தை உன் தந்தை என் கணவரும் கூட. உன் காதலன் என்று கூறினையே அமலன் அவர் உன் அண்ணன். ஆனந்தி உனக்குத் தங்கை. அமலனின் தாய் உனக்குச் சி...த்...தி'' கூறிக்கொண்டே சாய்ந்தாள் தாய்.

சட்டென அவளைத் தாங்கிப் பிடித்து அவளைப் படுக்க வைத்து விட்டு அவளின் கை நாடியைப் பிடித்துப் பார்த்து இன்னும் ஒரு வருடத்தில் டாக்டர் ஆகப்போகின்ற சுதா ''ஓ'' வெனக் கதறினாள். சுதாவிடம், 'நோட்ஸ்' வாங்க வந்து தன் குடும்பத்தைப் பற்றிக் கதைப்பதைக் கேட்டு வெளியே காத்து நின்று முழு விடயங்களையும் அறிந்துவிட்ட அமலன் ''சித்தி'' என வீடே அதிரும்படியாகக் கூவிக்கொண்டே வீட்டினுள் பாய்ந்தான்.

சுதாவின் தாய் இறந்து ஒரு வருடம் ஆகியது. இப்போ சுதா தன் அப்பா, சித்தி, அண்ணன் அமலன், தங்கை ஆனந்தி ஆகியோருடன் வசிக்கின்றாள். இப்போதும் தன் தாயை நினைத்து மனம் வருந்திக் கண்ணீர் சொரிகின்றாள். இப்போது அவள் தன் தாயின் வைராக்கியத்தாலும் உழைப்பினாலும் டாக்டர் சுதா என அழைக்கப்படுகின்றாள். இப்போது அமலனும் டாக்டர் அமலன்தான்.

மற்றையசித்திகளைப்போலல்லாது சுதாவின் சித்தி சுதாவிடம் மிகவும் பிரியமாக இருந்தாள். தன் மகள் போல் கவனித்தாள். சுதாவின் சித்தியும் அப்பாவும் சுதாவுக்கு ஒரு மாப்பிள்ளையும் அமலனுக்கு ஒரு பெண்ணையும் தேடி ஒரே நாளில் ஒரே மணவறையில் மணம் முடித்து வைத்தனர். இப்போது இருகுடும்பங்களும் ஒரு வீட்டில் ஒற்றுமையாக வாழ்கின்றன. இப்போது அந்த வீட்டில் எந்நேரமும் சிரிப்பொலி கேட்டபடி கலகலப்பாக இருக்கின்றது.

(''யாவும் கற்பனை'')

★ நிரஞ்சனா சேவியர்

# சீதன ஒழிப்பு சாத்தியமாகுமா?

சீதனப் பிரச்சினைக்கு பலராலும் விமர்சித்து பல ஆலோசனைகள் தரப்பட்டாலும் இக்கொடுமையினை தோற்றுவாயில் இருந்து பார்க்கும் ஓர் அண்ணளவான கட்டுரை இதுவாகும்!

சுதந்திரம் அடைந்த பின் தமிழ் பேசும் புத்திஜீவிகள் இரு இனங்கள் மத்தியிலும் அரசியல், நிர்வாகத்தின் மூலம் பலத்த செல்வாக்குடன் இருந்தார்கள். இவர்களில் பலர் கல்வி, உத்தியோகம் என்பவற்றிற்காக அந்நிய மதம் மாறியவர்களே. இவர்களது குடும்பங்களும் அந்தஸ்தானவைகளே. பெற்றோர்களும் தமது அந்தஸ்துக்கேற்ப பிள்ளைகளுக்கு திருமணம் நிச்சயிக்க அவர்களது ஆஸ்திகள் மணமக்களைச் சேர்ந்தது. இப்படியே பல தமிழ் இடங்களிலும் இவ்வியாதி பரவத் தொடங்கியது.

தமிழ் புத்திஜீவிகளை திருமணச் சந்தையில் மூன்று வகையாகப் பேரம் பேசி சீதனக் கொடுப்பனவிற்கு புதிய உத்வேகம் எல்லாமட்டங்களிலும் அளிக்கப்பட்டது. முதலாவதாக டாக்டர், என்ஜினியர், அப்புக்காத்து ஆகியோரும் இரண்டாவதாக தொழில்நுட்பர், அப்போதிக்கரி போன்றோரும் மூன்றாவதாக ஆசிரியர் எழுதுவினைஞர் தரங்களையும் தெரிந்து இதற்கேற்றவாறு பணம், நகை, கார், பங்களா போன்றன வரையறுக்கப்பட்டன.

இச்சீதன அலையில் இளம் அறிவுள்ள மணமக்கள் கூட, தம் அந்தஸ்துக்கு ஏற்பவே அள்ளுண்டு போயினர். வெளிநாட்டுத் திருமண மோகங்களில் பெற்றோர்களும், பெண்களும் மயங்கினர். எத்தவறானாலும் வெளிநாட்டு மணமகன் ஆனால் போட்டி போட்டு விலை ஏற்றினர். இவை மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டங்களுக்கும் பரவியது. இலட்சிய வாழ்க்கையை இரு தரப்பினரும் மறந்தனர்.

காதல் திருமணங்களில் 80 வீதமானவர்கள் கூட, பணம், கல்வி, அழகு அந்தஸ்துக்கேற்பவே எத்தரத்திலிருந்தாலும் இருதரப்பினராலும் ஆரம்பிக்கத் தொடங்கின. பெண்களும் எத்தகுதியிருந்தாலும் அந்தஸ்தானவர்களையே தெரிவு செய்தனர். இதிலிருந்து பெண்களும் இச்சீதன முறை தொடர ஊக்கமளித்து பல பெண்களின் வாழ்க்கையை மறைத்தனர். பல உயர் கலைக் கூடங்களில் கூட காதல்கள் அழகு, பணம் என்பவற்றினூடு மலர்கிறது. அது காலப்போக்கில் கல்வி ஆண்டிற்கான கால எல்லையுடன் முடிவடையும். காதல் இறுதியில் ஆண், பெண் இருபாலரதும் வசதிப்படி முறிவடைகிறது. இது கால எல்லையுள்ள தற்காலிக காதலாகி. இரு தரப்பினராலும் ஒப்புதல் காதலாக பரவுகிறது.

இது, பல தர மட்டத்திலும் ஏற்கப்பட்ட கசப்பான

—7ம் பக்கம் பார்க்க

## நல்லொழுக்கத்துடன் கூடிய கண் நிறைந்த கணவன் கிடைப்பதற்கும், கணவனுக்கு நீண்ட வாழ்நாளை பெற்றுக் கொடுப்பதற்கும்

# காரடையா நோன்பு

இந்த காரடையா நோன்பை ஒவ்வொரு சுமங்கலிகளும் தவருமல் அனுஷ்டிக்க வேண்டும். கன்னிப்பெண்களும் அனுஷ்டிக்கலாம். மாசிமாத முடிவிலும் பங்குனி மாத ஆரம்பத்திலும் வரும் இந்நோன்பு இம் மாதம் (மார்ச்) 14-ம் திகதி தமிழுக்கு பங்குனி மாதம் முதலாம் திகதியாகும்.

இந்த காரடையா நோன்பை ஒவ்வொரு பெண்களும் ஒவ்வொரு விதமாக அனுஷ்டிப்பர். காலை தொடக்கம் காரடை நோன்பு பூஜை செய்யும் வரை உபவாசம் இருபபார்கள் சிலர். வேறு சிலர் காலையில் நீராடி ஒரு நேரம் ஆட்டாமாவு, றவை போன்றவற்றில ஏதேனும் பலகாரம் செய்தும் சாப்பிடுவார்கள். மாலையானதும் தீபம் ஏற்றி

ஸ்ரீமதி. கே. சோமாஸ்கந்த சர்மா

பூஜை செய்து முடிந்ததும் காரடையா சாப்பிட்டு நோன்பை பூர்த்தி செய்வர்கள். காரடை நோன்பை அனுஷ்டிக்கும் பெண்கள் உபவாசம் இருப்பதுதான் உத்தமம். சுக வீனம் காரணமாக உபவாசம் இருகக முடியாதவர்கள் மட்டும்ம ஒரு நேரம் சாப்பிட்டு அனுஷ்டிககலாம்.

காரடை நோன்பிற்கு உப வாசம் இருந்தோ அல்லது பல காரம் சாபபிடடோ அனுஷ்டிக்கும பெண்கள் காரடை செய்ய வேணடும். காரடை இருவகையாகும். ஒன்று வெல்லடை அடுததது உபபடையாகும் பூஜை அறையை கழுவி, தீபம ஏறறி, எத்தனை பெண்கள் இந்த காரடையா நோன்பு அனுஷ்டிக்கிருர்களோ அத்தனை கோலங்கள் போட்டு அதன் மேல் தலைவாழை இலை அல்லது ஆலம் இலலை தைத்து வைத்து வெல்லடை, உப்படை, வெண்ணெய் ஆகியவற்றை வைத்து, இடது பக்கமூலை இலையில் பழம், பாக்கு, வெற்றிலை, குங்குமம், மஞ்சள், பூச்சரம் சரடு (மஞ்சள் பூசிய நூல் திரித்து எடுப்பது தான் சரடு எனப்படும், ஆசியற்றை வைத்து பூஜை செய்து சரடு கட்ட வேண்டும். திருமணமான பெண்கள் சரட்டில் தாலியை கோர்த்து கட்டியும் கன்னிப்பெண்கள் சரட்டில் பூவைக்கட்டி கழுத்திலோ அல்லது முழங்கைக்கு மேலுமோ கட்டலாம்.


பின்னர் வெண்ணெய் சிறிது வெல்லடை, உப்படை, ஆகியவற்றில் கணவனுக்காக எடுத்து இலையின் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு பூஜை செய்த சுமங்கலிகள் சாப்பிட வேண்டும் இந்த நோன்படை மட்டும் மனைவி சாப்பட்ட பின்தான் கணவன் சாப்பிட வேண்டும் இந்த காரடை நோன்பை அனுஷ்டிக்கும் பெண்கள், அதாவது திருமணமான பெண்களும் கன்னிப் பெண்களும, ஒன்று, மூன்று என சுமங்கலிகளுக்கு மங்கலப் பொருட்களுடன் பணமும் வைத்து (வெற்றிலை, பழம், பாக்கு, மஞ்சள், குங்குமம், சரடு ஆகியவையே மங்கலப் பொருட்களாகும்) கொடுக்க வேண்டும. மேற்குறிபபிட்ட தானம் கன்னிப்பெண்களாலும் சுமங்கலிகளுககு கொடுக்கலாம்.

இங்ஙனம் இந்தநோன்பை அனுஷ்டிக்கும் கன்னிபபெண்களுக்கு நல்லொழுங்களுடன் கூடிய கண்நிறைந்த கணவன் அமையவும், திருமணம் செய்த பெண்கள் கணவனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுதது தீர்க்க சுமங்கலிகளாக வாழவும் வழி பிறக்கும்.

வெல்லடை, உப்படை செய்யும் முறைகள்:- வெல்லடைக்கு தேவையான பொருட்கள்:- தீட்டுப் பச்சை அரிசி 1 ஆழாக்கு, தேங்காய் மூடி 1, பய்ற்றம் பருப்பு 220 கிரும் ஏலப்பொடி அளவாக வெல்லம் 250 கிரும்.

வெல்லடை செய்யும் முறை:- அரிசியை ஊற வைத்து இடித்து சலித்து எடுக்க வேண்டும். பின்னர் சிவக்க வறுக்க வேண்டும். தேங்காயை சிறு சிறு கீற்றுக்களாக வெட்ட வேண்டும். பயிற்றம் பருப்பை அவித்து எடுக்க வேண்டும். அப்புறம் ஒரு பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு அளவாக நீர் விட்டு அடுப்பில் வைத்து கொதிக்க விடவேண்டும் வெல்லம் கரைந்து பாகானதும், மாவு, தேங்காய்கீற்று, அவிந்த பயிற்றம் பருப்பு ஏலப் பொடி எல்லாவற்றையும் போட்டு நன்றாக கிளறி இறக்க வேண்டும். பின்னர் எலுமிச்சம் பழமளவு உருண்டைகளாக உருட்டி சிறிதளவை வட்டமாகவும் மிகுதியை நீள் சதுரமாகவும் தட்டி வேகவிட வேண்டும்.

உப்படைக்கு தேவையான பொருடகள்:- வறுத்த அரிசி மா 1 ஆழாக்கு (வெல்லடைக்கு எடுதத தீட்டுப்பச்சரிசிமா) தேங்காய் 1 மூடி (கீற்றுகளாக்கியது) அவிதத பயிற்றம் பருப்பு 200 கிராம் சிறு துண்டுகளாக பிஞ்சு மிளகாய், சிறிது உப்பு அளவாக




உப்படை செய்யும் முறை:- ஒரு பாத்திரத்தில் அளவாக நீர் விட்டு, அடுப்பில் வைத்து நன்றாக கொதித்ததும் மாவு, அவித்த பயிற்றம் பருப்பு, தேங்காய்கீற்று, மிளகாய் உப்பு அளவாக எல்லாம் போட்டு நன்றாக கிளறி இறக்க வேண்டும் பின்னர் வெல்லடை போலவே சிறிதை வட்டமாகவும், மிகுதியை நீள் சதுரமாகவும் தட்டி வேக விடவேண்டும்.

# வர்க்க விடியலுக்கு பூபாளம் இசைத்தவர்

## கார்ல் மார்க்ஸ்

ஒரு நாட்டில் ஏகாதிபத்திய அடக்குமுறைகள் தலைவிரித்தாடும்போது ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனமானது தமது சுயநிர்ணய உரிமைகளுக்காக போர்க்குரல் எழுப்பிமிதவாதிகளாக மாறும் சந்தர்ப்பங்கள் இயற்கையின் விரிசல்களில் தவிர்க்க முடியாதவை.

ஒருநாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் உழைக்கும் வர்க்கம், ஆதிக்கக் கொடுமைகளாலும், சுரண்டல் பேரினவாதிகளாலும் இழைக்கப்படும் துயர மழையில் நனைந்து முடிவில் தம் உரிமைகளைப் பெற்று வாழவேண்டுமாயின் போராடியே தீரவேண்டும் இவை கார்ல் மாக்ஸினுடைய போர்க் குரல்கள், ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்று அடிமைகள் விடியலுக்கு முழக்கமிட்ட முதற்குரலும் கார்ல மார்க்ஸினுடையது.

1818ம் ஆண்டு மே மாதம் 5ல் கார்ல் மார்க்ஸ் பிறந்தார். 1883ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி பிற்பகல் இரண்டேமுக்கால் மணியளவில் இந்த உலகின் மகத்தான சிந்தனையாளர் தன் சிந்தனைகளை நிரந்தரமாக நிறுத்திக்கொண்டார். ஏழைகளின உயர்வுக்கு ஓயாது உழைத்த உடல் சாய்வு நாறகாலியில் நிரந்தர ஓய்வெடுத்துக் கொண்டது.

அவருடைய படைப்புக்கள், வாழ்க்கை அனுபவங்கள் வெறும் நூலகப் பெட்டகங்களில் உறங்கிக் கிடக்கவில்லை. பட்டப்படிப்பாளிகளின் மடிகளில் தவழவில்லை. மாறாக பாட்டாளி வர்க்கங்களின் பேரியக்க வழிகாட்டியாக, போராட்ட விடுதலை இயக்கங்களின் தாரக மந்திரங்களாக தொழிற்சாலைகளில் வயல் வெளிகளில் உழைக்கும் மக்களின் கரங்களில், சிந்தனைகளின் துள்ளிவிளையாடுகின்றது. சுரண்டும் கூட்டத்தின் கொடுமைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறிக்கொண்டிருக்கிறது.

மார்க்ஸிஸத்தின் வழியில் கம்யூனிஸ்ட்கட்சியின் வழிகாட்டலில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் சோவியத்நாட்டில் உழைக்கும் வர்க்கம் நடாத்திய அக்டோபர் புரட்சி மார்க்ஸின் வெற்றியே. மார்க்ஸிசம் என்னும் அவர் காட்டிய நெடுஞ்சாலையில் தொடர்ந்து வந்த உறுதியான நெஞ்சங்கள் அவரது கனவுகளைச் செழுமைப் படுத்தின. அந்தப் புரட்சித் தத்துவம் புரட்சி விரும்பிகள் அனைவரின் எண்ணத்திலும் சோஷலிச கம்யூனிஸ் படைப்பாளிகளின் உள்ளங்களிலும் தொடர்ந்தும் ஆட்சி செலுத்திகொண்டுள்ளது. மாக்ஸினுடைய விஞ்ஞானக் கருத்துக்கள், பலநாடுகளின், பல மக்களின், அன்றாட செயல்பாடுகளின் கோஷங்களாக உழைக்கும் வர்க்கத்தின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களின் பகுதியாக உருவெடுத்துள்ளது.

இன்றைய கால முதலாளித்துவ உற்பத்தி இதனை உண்டாக்கியுள்ள பூர்ஷ்வா சமுதாயம் ஆகியவற்றை நிர்வகிக்கும் இயக்க வேகத்தின் சிறப்பு முறைகளையும் மார்க்ஸ் கண்

நயினைகுலம்

டறிந்தார். அரசியல் மட்டுமன்றி மெய்யியல், பொருளியல், கணிதவியல் போன்ற துறைகளிலும் சில ஆழமான பார்வைகளைச் செலுத்தி புதிய நிகழ்தகவு மார்க்ஸிசத்தை நிலைநிறுத்தினார்.

மார்க்ஸ் ஒரு புரட்சிக்காரர் அவருடைய வாழ்க்கையின் இலட்சியம் பாட்டாளி வர்க்கத்தின் தேவைகளை உணர வைத்து தமது விடுதலைக்கு ஏற்ற பங்களிபபினை உணர்த்துகிறது. போராட்டங்களை உணர்ச்சி வேகத்துடன் ஆர்வத்துடன், திடத்துடன் வழிநடத்துவதில் அவருக்கு இணை யாருமில்லை. அவர் எழுதிய தீவிரமான போர்க்குணம் மிக்க கருத்துக்கள் பிரசுரங்கள் பாரீஸ், பிரஸ்ஸல்ஸ் லண்டன் முதலிய இடங்களில இருந்து பல்வேறு பாட்டாளி வாக்க அமைப்புக்களில் அவர் எழுதி ஆற்றிய பணிகள், இறுதியாக சர்வதேச தொழிலாளர் அமைப்பை உருவாககியது.

மார்க்ஸின் சமூகவிஞ்ஞானக் கருத்துக்கள் தக்கவியல் பொருள் முதல் வாதம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம் அரசியல் பொருளாதாரம் விஞ்ஞான சோஷலிஸம், வர்க்கப் போராட்டத்தத்துவம் முதலிய அனைத்தும் இன்றைய உலக சமூக விஞ்ஞானப் படிப்பினை ஆதாரமாகக் கொண்டு அமைந்தது இதனுல் உண்மையானது.

சாதி மதம் இனம், மொழி, தேசம், நிறம் வேறுபாடுகளுக்கப்பால் உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் இயக்கமாக மார்க்ஸிஸம் இன்று உலகில் சோஷலிஸ முகாம், பாட்டாளி வர்க்கப்பேரியக்கம், தேசிய விடுதலை இயக்கம் போன்ற முப் பெரும் இயக்கத்தின் முன்னணியில் உலக மக்களுக்கு வழிகாட்டுகின்றது.

(இம்மாதம் 14ம்திகதி மார்க்ஸின் 102 வது நினைவு தினம்)

## நாதசுரம்......

— 3-ம் பக்கத் தொடர்

வற்றை மிகவும் அற்புதமாக வாசிபபார். இது இவர் தந்தையாரிடம் இருந்து பெற்ற ''இசை முதிசம்'' எலலோரும் பிரமிக்கும் வகையில் பிரக்காலவக்கையாளுவார். இவரின் வேகம் தனித்தன்மை வாய்ந்தது, தோடி, பைரவி, சங்கராபரணம், காம்போதி போன்ற இராகங்களை மணிக்கணக்காக இவர் கையாழ்வார் பிற்காலத்தில் அப்புலிங்கம் சிறிது நோய்வாய்பபட்டிருந்தார். கடைசிக்காலததில் இவரின் சேவகம் நல்லூர் முருகனுக்கே கிடடியது தன்குல தெய்வமாகிய மாவிட்டபுரம் முருகனை இவர் ஒருபோதும் மறந்ததில்லை. திருவிழாக் காலத்தில் இவர் மாவட்டபுரம் முருகனை நன்கு அங்கு தங்கியிருந்து சேவிப்பார். தமிழ் நாட்டிலிருந்து வந்த வித்துவான்கள் எப்போதும் அபபுலிங்கத்தைப் பாராட்டுவர் பாராட்டத்தவறியதில்லை.

அப்புலிங்கத்தின் மறைவு இசை உலகிற்கு ஓர் இழபபு: ஆனுல் இவர் தனக்குப் பின் ஒரு கலைபபரம்பரையை விட்டுச் சென்ருர் இவருடன் சேர்ந்து வாசித்து முனனுக்கு வந்தவர் பலர். ''தம்பி! எனக்கு நூறு நாள் போய்விட்டது. இன்னும் ஆறுநாள் தான்'' என்ருர் ஒருமுறை என்னிடம். அடுத்த மாதம் மறைந்து விட்டார். இன்று அபபுலிங்கததின் மகனமார் மகேந்திரன், சோமசுந்தரம் ஆகியோர் வளரும் நாதசுர வித்துவான்கள் மற்றவர் வளரும் தவில் வித்துவான் சந்திர மோகன், தவில் வித்துவான் அளவெட்டி நா. குமரகுரு. நாதசுரவித்துவான் கோ. பஞ்சமூர்த்தி, ஓவியக்கலைஞர் தெட்சணாமூர்தது ஆகியோர் அப்புலிங்கத்தின் மருமக்கள். இப்படியே யாழ்ப்பாணத்து நாதசுர தவில் வித்துவான் பரம்பரையை வளர்க்க, இசை மரபை வளர்க்க அப்புலிங்கம் பெரும்படிக்கல்லாக அமைந்து விட்டார்.

## தென்மராட்சி தந்த அருந்தவப் புதல்வர்

சாவகச்சேரித் தொகுதியின் இலங்கை பாராளு மன்ற உறுப்பினராக 1947-ம் ஆண்டு வே; குமார சாமி தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்டு இருபத்தெட்டு வயதில் பாராளுமன்ற உறுப் பினர் ஆனார். தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் பாரா ளுமன்ற உறுப்பினராக இருந்தார். அக்காலத்தில் அவர் ஆற்றிய சேவைகள், உருவாக்கிய செயல் திட்டங் கள் நினைவுக்குரியனவாக உள்ளன. இவர் அரசியல் வாதியாக மட்டுமல்ல ஆன்மீகத்துறையிலும் ஈடுபாடு உள்ளவராக இருந்தார்.

அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பெருமதிப் பிற்குரியவராக விளங்கினார். இவர் ஆன்மீகத் துறை யில் ஈடுபாடுள்ளவர் என்பதை அமரர் ஜீ. ஜீ பொன் னம்பலம் அவர்களின் மரணச் சடங்கின்போது யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் குமாரசாமி அவர் கள் பாடிய தேவார திருவாசகங்கள் எடுத்துக்காட் டாகும். அமரர் குமாரசாமி தேர்தலில் ஐந்துமுறை தோற்றபோதும் மனந்தளராது சாவகச்சேரித் தொகுதி மக்களுக்கு இயன்றதைச் செய்துவந்தார்.

1977-ம் ஆண்டு தேர்தல் கூட்டங்களில் எனது கடைசித் தேர்தல் எனக் கூறினார். 1978-ம் ஆண்டு அமரரானார். இன்று அன்னாரின் 7-வது நினைவு நாளா கும். இன்றைய காலகட்டத்தில் அமரர் குமாரசாமி ஆன்மீகத்துறையில் நம்பிக்கை கொண்டு செய்ய வேண்டியதை செய்ததை நினைவுகூர்ந்து, இன்றைய தமிழ்ச் சமூகம் இன்னல் போக்க தவறாது இறை வழி பாட்டில் ஈடுபட வேண்டும்.

★ க. சின்னத்துரை

# இனச் சிக்கலின் அணுகுநெறி

# ஐந்துலட்சம் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் செல்லலாம்

இலங்கை நெருக்கடி மேலும் மும்முரமாவது திண்ணம். அதுவும் வெகு தொலைவில் இல்லை. நாளையோ மறு நாளோ போல அந்த நாள் நம் கண்ணுக்குத் தெரிகிறது. இந்தச் சோக நாடகம் இன்னமும் உச்சகட்டத்திற்கு வரவில்லை என்பதால் மட்டுமல்ல; அதன்பின்னர் தான் உக்கிர வேசம் தணிந்து, எல்லோருக்கும் ஞானம் உதயமாகும். இத்தீவின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரேயொரு வழி; அதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது என்பதே அந்த ''ஞானம்'' ஆகும்.

தீவிரவாதிகள் மறைந்து காத்திருந்து தாக்க, ஏட்டிக்குப் போட்டியாக காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்படும். இச்சம்பவச் சுழல் தொடரும். பெருவாரியான உயிர்கள் பலியாகும். இவற்றைக் காணும் மக்களின் மனங்களில் ஆழ்ந்த வடுக்கள், தழும்புகள் எஞ்சிநிற்கும். உணர்ச்சிகளின் வேகம் மிகுந்து கொழுந்துவிட்டு எரிய, மனப்பான்மைகள் வைரமேறுகின்றன. கோரமான இச்சோதனைக் காலம் நீண்டு கொண்டே செல்லச் செல்ல இணக்கப் பேச்சுவார்த்தைகள் வாயிலான ஒரு தீர்வு காண்பது மேன்மேலும் கடினமாகும்.

தற்போதைய வன்முறைச் சம்பவ அலை உருண்டோடத் தொடங்கிய 1983, ஜுலை மாதந்தொட்டு படைவீரர்கள் இருநூற்றைம்பது பேர்வரை கொலையுண்டனர். அதே வேளை, அவர்களின் கோர வெறியாட்டத்தினாலும் காடையரினாலும் ஏறத்தாழ இரண்டாயிரம் தமிழர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பயங்கர ''வேள்வியை'' அடுத்து இந்தியாவிடம் தஞ்சம் புகுந்தவர்கள் ஏறத்தாழ நாற்பதினாயிரம் தமிழ் மக்கள். இது ஓர் மதிப்பீடு. ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்கள் மீண்டும் கொன்று குவிக்கப்படுகின்றனர். அண்மையில் இவ்வன்செயல்கள் பலமாகத் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. குடிஜனங்கள் மீது கட்டவிழ்த்து விடும் கொடுங்கோன்மை தாங்கொணாது, இவர்கள் இலங்கைத் தீவைவிட்டே ஓடிப்போய்விட்டார்கள் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப் பெறுவிட்டால், குறைந்தபட்சம் ஐந்து இலட்சம் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். இவ்வாண்டு முடியுமுன், இந்த அரை மிலியன் ஜீவன்களின் வாழ்வுபேணும் பொறுப்பு இந்தியாமீது சுமத்தப்பட்டது ஆகிவிடும்.

'இந்து' பத்திரிகையில் அதன் டில்லி நிருபர் ஜி. கே ரெட்டி பெப்ரவரி 24ந் திகதி எழுதிய செய்திக் கட்டுரையின் முதற்பகுதியின் தமிழாக்கம்.

## அச்சமூட்டும் இரு பிரச்சினை

இனி பரிதாபமான தமது சொந்தக் கற்பனைப் பிணிகளின் கைதியாகிவிட்ட இலங்கை ஜனாதிபதி, திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சிந்தனை ஓடும் வகையைச் சற்றுப் பார்ப்போம். தம்மை அறியாமலே, அச்சமூட்டும் இரண்டு மனப் பிராந்திகளுக்கு இடையில் சிக்கித் தவிக்கிறார் அவர். அவருடைய எண்ணங்கள், பிரதி - எண்ணங்கள், செயல்கள், பிரதிச்செயல்கள் என்பன அடங்கிலும் ஊடும் பாவுமாக இந்த அச்சங்கள் இரண்டும் சதா இழையோடியவண்ணம் அவரை ஆட்டிப்படைக்கின்றன. தமிழர்களின் மாகாணச் சுயாட்சிக் கோரிக்கையைப் பொதுப்பட என்றாலும் அவர் ஒரு சலுகையாக விட்டுக் கொடுத்தாரானால், இராணுவப் புரட்சியொன்றினால் அவரது அரசாங்கம் பறிபோய் விடக்கூடும் என்ற வெட்கக் கேடான பயம் ஒரு புறம்; தற்போதைய வன்செயல்களின் அலை தணியாது தொடருமானால், பாரிய தமிழ் அகதிகள் பிரச்சினைப் பாரம் தாங்க இயலாது இந்தியா ஏதோ ஒரு கட்டத்தில் தலையிடக் கூடுமே! இது, மறுபுறம் அவருடைய மனதைவிட்டு அகலா அச்சம்.

இவருடைய அரசியல்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இக்கட்சியிலும் இவருடைய அரசாங்கத்திலும் இருக்கிறார்களே, சில கடும்பிடியாளர்கள். அவர்கள் இவருடைய இந்த அகப் பயங்கள் அல்லது உட்பயங்களை நன்கு அறிவர். இப்பயங்கள் இவர் மீது செலுத்தும் ஆதிக்கமும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் யார் என்பதையும் இங்கே பெயரிட்டுக் கூறிவைப்பது பொருந்தும். அவர்கள் வேறு யாருமல்ல, பிரதம அமைச்சர் திரு ஆர். பிரேமதாச, திரு. திரு. சிறில் மத்தியூ, திரு. காமினி திசாநாயக்க, திரு. லலித் அத்துலத் முதலி ஆகியோர் உட்பட்ட சிலரே. அவர்கள் இந்த இரண்டு பூச்சாண்டிகளையும் காட்டி, இவரைப் ''பாம்பாட்டி வருகின்றனர்.'' எனவே, இவர் மேற்கொள்ளும் தர்க்க நிலை, அடிக்கடி விறைப்பேற்றப்பட்டுத் தோற்றம் அளிக்கிறது. அவர்களது கட்டாயத்திற்கு அமைய, தமது முன்னைய வாக்குறுதிகளைக்கூட இவர் மறக்கவும் வேண்டி ஏற்பட்டிருக்கிறது. தமது இராணுவ பலத்தை வளர்த்த பின்பு, மேலும் தமக்குச் சாதகமான ஒரு இருப்பிடத்தினின்றும் இணக்கப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதே தமது இம்மாற்றத்தின் நோக்கம் என்றும் இவர் கூறி வருகிறார்.

## ஆழ்ந்த நெருக்கடி

இவற்றின் விளைவுகள், அனேக அனர்த்தங்களாகும். இந்திய சாகரத்தின் மரகத மணி எனத் தொன்று தொட்டு இலங்கிய இலங்கை நாடு இன்று ஓர் ஆழ்ந்த நெருக்கடியில் அமிழ்ந்தி இருக்கிறது. அதன் பொருளாதாரம் சுக்கு நூறாகிப்போக உல்லாசப் பயணத்துறை சின்னாபின்னமாக, அரசியல் உறுதிப்பாடு ஆட்டங்கண்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக அதன் இரு பெரும் இன மக்களும், அதாவது சிங்களவர்களும் தமிழர்களும் உள்ளூர்ப் போரொன்றில் ஆழ்ந்திருக்கின்றனர். நிலைபேறான ஓர் அரசியல் தீர்வு விரைவில்காணப்பெறாவிட்டால் இந்த யுத்தம் நாட்டை எங்கு இட்டுச் செல்லும்? நாடே பிளவுபடும், இது கூறுகும் நிலைக்கு. இதனை அகக் கண்ணால், மனக் கண்ணால், காணலாம்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் முக்கால் பங்கினர் சிங்களவர். முப்பது இலட்சம் தமிழர்கள் இங்கு உள்ளனர். தமிழர்களின், உள்ளூர்ச் சுயாட்சிக் கோரிக்கையைச் சந்தேகக் கண்களாலேயே நோக்க அறிந்துள்ள சிங்களவர்களின் மனப்பாங்கைச் சற்றுப் பார்க்கலாம். தமிழர்களின் நியாயமான, சட்ட பூர்வமான மனக் குறைகளைத்தானும் நிவர்த்தி செய்வது சிங்களவரின் பார்வையில் தமிழீழம் கோரும் தீவிரவாதிகளிடம் தாம் ஒரு வகையிற் சரணடைவது போலப் படுகிறது. இத்தீவிரவாதிகளோ தன்னாதிக்கம் வாய்ந்த தனி அரசு ஒன்றை வரையறுத்து நிறுவும் முனைப்பான குறிக்கோளை உடையவர்கள்.

ஆகலால், இந்தியா மீண்டும் மீண்டும் ''அரசியல் தீர்வு காணுங்கள்'' என விடுக்கும்

—8ஆம் பக்கம் பார்க்க

## சீதன ஒழிப்பு ..

—5-ஆம் பக்கத் தொடர்

உண்மையாகும் இறுதியில் இவர்களது திருமணம் பெற்றோரால் திருமணச்சந்தையில் விலை போகிறது இனி மேலாவது கலைக் கழகங்களுக்குப் போவோர் சிறிது மதி நுட்பத்துடன் சிந்தித்து வருங்கால சந்ததிக்கு உதாரணமாகலாம்.

வியட்னாம் போன்ற விடுதலைப்போர் நடந்த இடங்களில் ஆண்களுக்கு நிகராக பலசமூக மேல்மட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பெண்கள் சமபங்களிப்பு செய்தனர். இத்தருணத்தில் தியாக சிந்தை உள்ளவர்களையும் சுய சம்பாத்தியம் உள்ளவர்களையும் மானசீகமாக விரும்பினர். இதனால் அந்தஸ்து போலி வாழ்க்கை அற்றவர்களின் பால் ஈர்க்கப்பட்டு இலட்சிய வாழ்க்கைகள் ஆரம்பிக்கத் தொடங்கின. அகதிகள் முகாம்களிலும்வேறு பொது இடங்களிலும் திருமணங்கள் நடந்தேறின. இங்கு புத்திஜீவிகள், விவசாயிகள், தொழிலாளிகள் என்ற பேதம் அற்று போராளிகள் என்ற போர்வையில் இலட்சிய திருமணங்கள் நடந்தேறின. தாம் புத்திஜீவிகள், சருகுப் போராளிகள் என்று தம்பட்டம் அடித்தவர்கள் படித்த பெண்களாலேயே தூக்கி வீசப்பட்டனர். கார், பங்களா போலி வாழ்க்கையற்ற மறுமலர்ச்சியினால் சகலதர பெண்களும் நிம்மதியான, நிரந்தரமான வாழ்க்கையை நிர்ணயித்தனர்.

மேற்கூறிய நிலை தமிழ் மண்ணில் ஏற்படுமாயின் எமது பெண்களும், ஆண்களும் இப்பாதையில செல்ல முயற்சித்தால் இலகுவில் சீதனக் கொடுமை அகல வாய்ப்புண்டு. இதன் மூலம் அன்பு, சமத்துவம் என்ற அடிப்படையில் தமிழர் கூறும் சொர்க்கத்தில் திருமணத்திற்கு வழிகோலலாம்.

★ செல்வன்

## நவீன கவிதை...

—4-ம் பக்கத் தொடர்

மாற்றம் பெற்று மூட்டை முடிச்சுகளுடன் செல்லும் ஆசிரியரைப் பார்த்துக் கேட்கிறார் கவிஞர்:

''மாற்றம் தொலைக் கேமனி
தருள்ள ஊர்தானோ
ஆற்றைக் கடக்கும் அவதி
களும் உண்டாமோ
பள்ளி தளபாடம் உள்ளநல்ல
கட்டிடமோ
பிள்ளைகளும் அங்கு படிக்க
வருவாரோ?''

''இன்றுனக்குச் சம்பளமா?'' எனும் கவிதையும் ஒரு தமிழ சிரியரின் ஏழ்மை நிலையைச் சித்திரிக்கிறது. பெட்டி இழைத்தும் பிரம்பு பின்னல் வேலை செய்தும் தன் காலத்தை ஓட்டும் வயோதிபர் ஒருவர் நோயாளியாகிப் பல நாள் பாயில் கிடக்கும்போது எட்டியும் பாராத உயர்ந்த அந்தஸ்துடைய உறவினர்கள் மரணச்சடங்குகளில் கலந்து கொள்கின்றனர். இந்தக் கிழவனுக்கு இத்தனை பேர் சொந்தக்காரர்களா என ஊரார்வியக்கின்றனர். கிழவனின் மனைவிக்கும் பெரிய மகிழ்ச்சி:-

இதைச் சித்திரிக்கும் கவிஞர்:

தன் புருஷன் மரணக போடிக்
கும்
எத்தனைபேர் சொந்தம்!
அதோ
எக்கவுண்டன் எஞ்சினியர்
வைத்தியக் கலாநிதிகள் வர்த்
தகர் பேராசிரியர்
சத்தா சமுத்திரர்தான் சாதி
சனம்

.........

இறவாமல்
இன்னும் உயிரோடிருந்திரே
யாமாகில்
என்ன வகையில் அறிவோம்
உறவினரை

எனக் குறிப்பிடுகின்றார்.

நீலாவணன் பல கவிதை நாடகங்களை எழுதியுள்ளார். சிலம்பு, மழைக்கை என்பவை பழைய இதிகாசக் கதைகளின் அடிடபடையில், எழுதப்பட்டவை. கர்ணன் கொடைத் திறனை விளக்கும் 'மழைக்கை' என்ற கவிதை நாடகமே கிழக்கிலங்கையில் எழுந்த முதற் கவிதை நாடகம் என்பர்.

ஆழமான சமூகப்பார்வையும் கவித்துவமும் நிறைந்த நீலாவணன் கவிதைகளில் ஒரு சிலவே நூலுருப் பெற்றுள்ளன. பத்திரிகை நறுக்குகளாக இருக்கும் கவிதைகள் அனைத்தையும் நூலுருவம் பெறச் செய்தால் தான் நீலாவணனை முழுமையாக எடை போடமுடியும்.

## 85 உலக...

— 3-ம் பக்கத் தொடர்

நீதி, நியாயம், மனச் சாட்சி என்கிற அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் மூலம் உரிமையைப் பெறமுடியாத கட்டத்தில், ஆயுதம்தாங்கிப் போராடுகின்ற நிலை ஏற்படுமானால் கூட்டுச்சேரா நாடுகள் ஒவ்வொன்றும் அவர்களுக்கு உதவியாகப் பின் நிற்கும்'' என்று கூறியிருக்கிறார்.

○ பாராளுமன்றத்தின் 1976-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் சாவகச்சேரி எம். பி திரு. வி என். நவரத்தினம் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி.

## கேலிச் சித்திரம்...

—4ஆம்- பக்கத் தொடர்

டர்'பிறவுண் என்றஅந்தக்கதா பாத்திரத்தன் உடைகளையே தாம் அலங்கரிக்க வேண்டும் என விரும்பும் வகையில் அது பிரபல்யமடைந்தது!

ஆரம்பகால நகைச்சித்திரங்களில் 'தந்தையை வளர்த்தல்' (Bringing up Father) என்பது குறிப்பிடற்குரியது. இது வெளியானது 1912ல்; சுமார் 27ற்கும் அதிகமான மொழிகளில் 71 நாடுகளில் இது வெளியிடப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் காட்டூனிஸ்டுகள் பத்திரிகையாளர்களுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படுகிறார்கள் என்றால் அது உயர்வு நவிற்சியன்று. ஒரு பத்திரிகையின் அல்லது சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கத்துக்கு அடுத்ததாக பிரபல்யஸ்தர்களினதும் உலக அரசியல் தலைவர்களினதும் கண்கள் தேடுவது அன்றைய கார்ட்டூனைத்தான்.

உலகம் அல்லது அதன் நிலைமை எப்படி இருக்கிறது?; எப்படிப் போகிறது?; எப்படிப் போகும்? போகலாம்? என்பதை காட்டும் ஒரு 'மானி'யாக இந்தக் காட்டூனிஸ்டுகள் விளங்குகிறார்கள்.

இன்றைய நவீன தொழில்நுட்ப விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், அதன் ஒளிமயமான எதிர்காலத்திற்கும், கேலிச்சித்திரக்காரர்களான கார்ட்டூனிஸ்டுகளின் பணி மகத்தானதொன்றாகும்.

ஈழமுரசு

## முல்லைத்தீவு மதகுரு விசாரணையின் பின விடுதலை

(சுண்டுக்குளி)

முல்லைத்தீவில் இருதினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட கத்தோலிக்க மதகுரு வண பிதா பெஸ்கோ மதுரநாயகம் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் முல்லைத்தீவில் நடாத்தப்படும் பாரிய அளவிலான பனந்தும்புத் தொழிற்சாலைக்குப் பொறுப்பாக இருந்து வருகிறார் என்பதும், இப்பனந்தும்புத் தொழிற்சாலையில் 45 அகதிக் குடும்பங்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் கிளிநொச்சி பிரஜைகள் குழுத் தலைவர் வண. பயஸ் அடிகளின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'பாதுகாவலன்' வெளியிட்ட செய்தி:

# மன்னார் மறைமாவட்டம் துன்பத்தில்; பல பங்குத் தந்தையர் வெளியேற்றம்!

மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலை சம்பந்தமாக 'பாதுகாவலன்' பத்திரிகையின் இம்மாதம் 8ம் திகதிய இதழில், "மன்னார் மறைமாவட்டம் துன்பத்தில் துவள்கிறது" என்ற தலைப்பில் முதற் பக்கத்தில் வெளியான செய்தியை அவ்வாறே ஈங்கு தருகிறோம்:

மன்னார் மறை மாவட்டத்தில் வாழும் பெருந்தொகையினரான தமிழ் மக்கள் தமது பாரம்பரியமான கிராமங்களையும் வீடுகளையும் விட்டுப் புறப்பட்டு காடுகளில் ஒளிந்துள்ளனர்; அல்லது தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இவ்வருடம் ஜனவரி 6 ஆம் நாள் அதிகாலையில் வங்காலைப் பங்குத்தந்தை மேரி பஸ்ரியன் அடிகள் ஆயுதப்படையினரால் கோரமாகக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மன்னார் மறைமாவட்டத்தின் ஏனைய பல பங்குகளின் பங்குத் தந்தையர்களும் பாதுகாப்பு நோக்கத்துக்காகக் குருமனைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அண்மையில் பேசாலைக்கிராமத்தைச் சுற்றி வளைத்த ஆயுதப்படையினர் தேடுதல் நடவடிக்கையின் போது பங்குத் தந்தையை அவமானம் செய்துள்ளனர். அவருக்கு உதவியாளராக இடைக்காலப் பணிக்கு நியமிக்கப்பட்டிருந்த தியாக்கோன் ஒருவரும், பெரிய குருமட மாணவர் ஒருவரும் ஆயுதப் படையினரால் குருமனையில் வைத்தும், கிராமப்பொது இடம் ஒன்றில்மக்கள்முன்னிலையிலும் தாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் இருவரும் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு இரண்டு நாட்களாகப் பலவித துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட பின் மேற்கொண்டு பங்கு மனையில் இருந்து பணி புரியக் கூடாதென எச்சரித்து விடுவிக்கப்பட்டனர்.

தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு என்னும் கிராம மக்கள் ஏறக்குறைய அனைவருமே தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர் மன்னார், பள்ளிமுனை, அடம்பன், ஆட்காட்டிவெளி என்னும் பங்குகளைச் சேர்ந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, உயிலங்குளம், விடத்தல்தீவு ஆதியாம் மன்னார் மறைமாவட்டப் பங்குத் தந்தையர்கள் பணித்தளங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அடம்பன் பகுதியில் சில கிராம மக்களுக்கு சமீபத்தில் நடைபெற்ற திடுக்கிடும் சம்பவங்களை அறிந்த ஏனைய கிராம மக்களும் காலங் காலமாக வாழ்ந்த இல்லிடங்களையும் விளைநிலங்களையும் கிராமங்களையும் விட்டுவிட்டு ஓடத் தொடங்கியுள்ளனராம்.

1544இல் மன்னார் மண்ணில் தான் 500க்கு மேற்பட்டவர்கள் கிறிஸ்துவ விசுவாசத்துக்காகத் தம்முயிரை நீத்தனர் என்பதும், மன்னார் மக்களை விசுவாசத்தில் நிலைநிறுத்துவதற்காகப் புனித பிரான்சிஸ் சவேரியார் அங்கு விஜயம் செய்தார் என்பதும் சரித்திர உண்மைகளாகும்.

## பாண்டிச்சேரி முதல்வராக பாரூக் பதவி ஏற்கவுள்ளார்

(சென்னை)

அண்மையில் சட்டப் பேரவைத் தேர்தல் நடத்த மாநிலங்களில் அமைச்சரவைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. கர்நாடகம், சிக்கிம், இமாலய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நேற்று முன்தினமே புதிய அமைச்சரவைகள் பதவிப் பொறுப்பை ஏற்றுள்ளன.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில, பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்திரா காங்கிரஸின் தலைவராக எம். ஓ எச். பாரூக் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் முன்னாள் முதலமைச்சராகவும், கலைக்கப்பட்ட சட்டப் பேரவைச் சபாநாயகராகவும் செயலாற்றியவர் ஆந்திரப் பிரதேசத்தில் புதிய தெலுங்கு தேச அமைச்சரவை என். டி. ராமராவ் தலைமையில் பதவியேற்றுள்ளது. அவர் தமது புதிய அமைச்சரவையின் பெயர்ப் பட்டியலை கவர்னரிடம் நேற்று கையளித்தார்.

குஜராத் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவராக மாதர்சி தோலன்சி ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். ஒரிஸா சட்டப் பேரவைக்கு ஜே. பி. பட்நாயக் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ராமராவ் தலைமையில் 24 அமைச்சர் பதவி ஏற்பு

ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தலைமையிலான இருபத்திநாலு உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை நேற்று சத்திய பிரமாணம் செய்து கொண்டது. ஆந்திர ஆளுநர் திரு. சங்கர்தயாசர்மா முன்னிலையில் சத்தியப்பிரமாண வைபவம் நடைபெற்றது.

இதன் பின்னர் முதலமைச்சர் திரு. ராமராவ் பேசுகையில் மாநில அரசுகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள உறவுகள் பரிசிலனை செய்யப்படவேண்டும், எனவும் தெரிவித்தார். பல புதிய நல்ல திட்டங்களை நடைமுறைப் படுத்த மாநில அரசுக்கு மத்திய அரசு போதிய நிதியுதவி அளிக்கவேண்டும் என்றும் சொன்னார்.

## விமானக் கடத்தல் வழக்கு

பாகிஸ்தானில் இந்திய விமானத்தை 1981ம் ஆண்டு செப்டம்பரில் கடத்தியவர்கள் மீதான வழக்கு விசாரணை நேற்று லாகூரில் நடைபெற்றது. பலத்த பாதுகாப்புடன் நடைபெற்ற இவ் வழக்கில் இருபத்திநாலு சாட்சிகள் உள்ளனர். விசாரணை அடுத்த மாதம் பதினெட்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் விமானக் கடத்தல் குற்றத்துக்கு மரண தண்டனை என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகையாளர் காலமானார்

இலங்கையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான திரு. டென்ஸில் பீரிஸ் நேற்று லண்டனில் காலமானார். இவர் முன்னர் லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் பிரதமஆசிரியராகப் பணியாற்றியவர்.

## அரசாங்க அறிக்கை

வட பகுதியில் வாகனத்தில் சென்றவர்கள் ரோந்தில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரைக் கண்டு அவ் வாகனத்தைவிட்டு ஓடி மறைந்து விட்டதாகவும். அதைச் சோதனையிட்ட படையினர் அதிலிருந்து கைக்குண்டுகள், யந்திரத்துப்பாக்கிகள், வக்கி டோக்கி, வெடிமருந்துகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகின்றது.

## கச்சாய் சம்பவம்

—1-ம் பக்கத் தொடர்

நேர்ந்ததாக அறிய வந்துள்ளது இதனை அடுத்து அந்தப் பகுதியல் பரபரப்பு ஏற்பட்டது. வாகனப் போக்குவரத்துகள் தடைபபட்டன. பொது மக்கள் சில மணி நேரம் பீதியுடன் காணப்பட்டனர்.

## டி. ஐ ஜி சுந்தர்

—1-ஆம் பக்கத் தொடர்

விட்டு. 'இன்டர்போல்' பொலிஸில் நியமனம் பெற்றுமேற்கு ஜேர்மனி சென்றுள்ளார்.

1960ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற பொலிஸ் சுபபிரின்டெண்டாகக் கடமையாற்றிய இவர், கொழும்பில் 1972ம ஆண்டில் குற்றத்தடுப்பு பணியகத்தை உருவாக்கி அதன் முதலாவது பணிப்பாளர் பதவியையும் வகித்தார்.

ஓய்வு பெறுவதற்கு முன்னர் லீவில கடந்த வாரம் இந்தியா சென்ற திரு சுந்தரலிங்கம் தற்போது மேற்கு ஜேர்மனி பயணமாகியுள்ளார்.

மற்றொரு தமிழ் பிரதி பொலிஸ் மா அதிபர் திரு எஸ். எஸ். ஜோசப் கடந்த மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பொலிஸ் மா அதிபர் திரு ருத்திரராஜசிங்கமும் அடுத்த மாதம் 2-ம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.


### மரக்காலை விற்பனை

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் மர அரிவு ஆலையும் தச்சு வேலை செய்யும் பட்டடைகளும் அதன் காணி கட்டடங்களும் மற்றும்உபகரணங்களுடன் உடன் விற்பனைக்குண்டு முழு விபரங்கட்கு,

ச. நாகராசா
தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி


## இன்றைய முக்கிய

—1-ஆம் பக்கத் தொடர்

மக்களுக்கு அறிவிப்பதற்கும், அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்குமான கூட்டம் ஒன்று இன்று காலை 9-30 மணிக்கு நல்லூர் இந்து விடுதி மண்டபத்தில மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இருவர் காயம்

— 1 ஆம் பக்கத் தொடர்

நாடு பொலிஸார் அவர்களின் ஆதரவாளர்களில் ஐவரைக் கைது செய்துள்ளதாகவும், இத்துப்பாக்கிச சமரில் இருவர் காயமடைந்துள்ளதாகவும பி. ரி ஐ செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## ஐந்து லட்சம்..

—7ஆம பக்கத் தொடர்

உருக்கமான வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்கொலி ஆகிவருகிறது. இலங்கையின் இனப பிரசினைக்கு நீதி நியாயமான ஒரு தீர்வு ஏற்படுத்துவதே இந்திய முயற்சியின் நோக்கம் இது இப்படியிருக்கையில், உள்ளதை உள்ளபடி விளங்கிக் கொள்ள வகையறியாதவர்களின் பார்வையில் தெரிவது— நியாயமான சமரசம் ஏற்படுத்தும் போர்வையின் கீழ் இந்தியா இலங்கையைத் துண்டாடத் துஷ்டத்தனமாக எத்தனிக்கும் ஒரு காட்சி. இலங்கையைக் கூறுபடுத்துவதால் இந்தியா எதுவித இலாபமும் ஈட்டப்போவதில்லை என எவ்வளவுதான் இந்தியா உறுதிமொழி அளித்தாலும், அது எடுத்ததற்கெல்லாம் சண்டை, சமருக்குத் தயாராகும் குறுகிய நோக்கம் படைத்தவர்கள் மனதில் நம்பிக்கையை வளர்ப்பதாக இல்லை சிங்களவர்களில் குறித்த சில மாரதட்டும் போர் விரும்பிகள் இருக்கிறார்கள் அல்லவா?

## கிருஷ்ணமூர்த்தி

— 1 ஆம பக்கத் தொடர்

யார் என்றும் அறிவிக்கப்பட்டது.

தான் செய்த குற்றங்களை பகிரங்கமாக ஒப்புக் கொள்ள இருப்பதாகவும், பிரிவினைவாதிகளின் வன்செயல்களில தான் சம்பந்தப்பட்ட விபரங்களையும் இவர் எடுத்துக் கூறுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் இடம்பெற்று வரும் இரத்தக்களரிக்கு முடிவு காணவேண்டும் என்ற வேண்டுகோளை அவர் விடுப்பாராம். இவர் கைது செய்யப்பட்ட போது ஆயுதங்களும் கைபபற்றப்பட்டனவாம்

பலரை மின் கம்பத்தில் கட்டி கொல்லும்படி தான் உத்தரவிட்டதாக இவர் தெரிவித்ததாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன

## நேற்று முன்தினம்

— 1 ஆம பக்கத் தொடர்

தமிழ் அகதிகள் இராமேஸ்வரம வந்து சேர்ந்துள்ளனர். இவர்களையும் சேர்த்து பெப்ரவரி 4ம்திகதிமுதல் இந்தியா வந்து சேர்ந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 15ஆயிரத்து அறுநூற்றைம்பத்தெட்டு ஆகுமென இராமநாதபுரம் மாவட்டஆட்சித்தலைவர் எஸ். குருமூர்த்தி தெரிவித்தார்.

## 9பேர் மீது

—1ஆம் பக்கத் தொடர்

வழக்குத் தாக்கலாகியுள்ளது இவர்களில் முக்கியமானவரான முன்னாள் இலங்கை சுங்கப்பகுதி அதிகாரி விக்கினேஸ்வரராஜா பிணையில் லண்டன் சென்றபின், தொடர்ந்தும் தலைமறைவாகவே இருந்து வருகிறார்.

## அக்கரைப்பற்றில

—1-ஆம பக்கத் தொடர்

ராம்.

ஒரு பெட்டிக்குள்ளிருந்த ஐம்பதாயிரம் ரூபா பணமும், மற்றப் பெட்டிக்குள்ளிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'செக்'குகளுமே களவாடப்பட்டனவாம்.

வர்த்தகருக்குச் சொந்தமான ட்ராக்டரிலேயே எடுத்துச் செல்லப்பட்ட இரு இரும்புப் பெட்டிகளும் மீண்டும்வர்த்தக நிலையத்துக்கு முன்னால் கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்தன.

இங்குள்ள மற்றொரு பெயர் பெற்ற முதலாளி நெல் கொள்வனவு செய்வதற்காக சென்ற போது அவரிடமிருந்த அறுபத்து நான்காயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாகவும்புகார்செய்யப்பட்டுள்ளது.

## பாலைதீவு சென்றவர்,,,

— 1ஆம் பக்கத் தொடர்

களும். சிறுவர் சிறுமிபரும் விசாரணை எதுவுமின்றி வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டதுடன், அவர்களது வள்ளங்களும் சோதனையிடப்பட்டன. அதன் பின்னர் அவர்கள் பாலைதீவு செல்லவிடாது திருப்பி அனுப்பப்பட்டனர்

## புதிய தலைவர்

(மண்கும்பான்)

வேலணை ப.நோ கூ சங்கத்தின் புதிய தலைவராக திரு. பொ. சண்முகநாதன் இயக்குனர் சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இச்சங்கத்தின் தலைவராகவிருந்த திரு. நா. பாலச்சந்திரன் தலைமறைவாகியதைத் தொடர்ந்து அவரின் தலைவர் பதவி வெற்றிடமாக இருந்தபடியால் சங்கத்தின் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்காகவே இப் புதிய தலைவர் தெரிவு நடைபெற்றுள்ளது

## விசேஷ லீவிலுள்ள

—1-ஆம் பக்கத் தொடர்

கள் நவம்பர் மாதம் விசேஷ லீவில் அனுப்பப்பட்டனர்

இவர்களுக்கு மாதாமாதம் முழுச் சம்பளம் அனுப்பப்படுகின்றது. பணிப்பாளர் பதவியை வகித்த பெண் ஒருவரும் இந்தப் பட்டியலில் இடம்பெறுவார்.

மற்றொரு பெண் அறிவிப்பாளர் நேற்று முன்தினம் விசேஷ லீவில் அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வடைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் குதியில் 10-03-1985 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி : 23336.